தென்மொழி

[library stamp: ...UBLIC L...]

இந்திவெறி ஆளுநரை அகற்றியது!

வரும்பயனை நினையாமல், வந்தபயன்
கருதாமல், வல்லார் வாய்ச்சொல்
தரும்பொருளை ஓராமல், பிறங்கடையை
உன்னாமல் தகவில் லாமல்,
பெரும்பிழையை எந்தமிழர் செய்திட்டார்;
அரசியலில் பிழைசெய் திட்டார்!
அரும்புதுமை ஒன்றுண்மை! இந்திவெறி
ஆளுநரை அகற்றிற் றிங்கே!

சுவடி: இ. ஓலை: உ. பங்குனி (மீனம்) ககூகூஅ

தனித்தமிழ்
இலக்கியத்
திங்களிதழ்

50
60 } காசு



கி.எம்.இராசு



தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 5 :: ஓலை-2

பங்குனி (மீனம்) தி. பி. ௧௯௯௮ (1967–மார்ச்சு)

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்
உறுப்பாசிரியர்:– தங்கப்பா
உரிமை, வெளியீடு: தாமரை, உலக முதல்வி
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1

இதற்குப் பெயர்தான் அரசியல் !



அரசியல் என்பது ஒரு கவறு (சூது)ஆட்டம் போன்றதாகும். அதில் மக்கள் விளையாட்டுக் காய்கள். அந்தக் காய்களை வைத்துக் கொண்டு இரண்டோ அதற்கு மேற்பட்ட கட்சிகளோ விளையாடும் விளையாட்டே அரசியல். இதில் வெல்வார் போல இருப்பவர்கள் தோற்றும் போகலாம். தோற்பார் போல இருப்பவர்கள் வென்றும் விடலாம். இன்னுஞ் சொன்னால் கவருட்டத்தைவிட அரசியல் மிகுதியும் ஏமாற்று நிரம்பியதாகும். ஏனென்றால் கவருட்டத்தில் விளையாட்டுக் காய்கள்

எங்கெங்கே உள்ளன அவற்றை எப்படி யெப்படி நகர்த்தினால் ஓரளவு வெற்றி கிடைக்கும் என்பதை ஆடுபவர்கள் முன்கூட்டியே அறிந்து செயற்படலாம். ஆனால் அரசியலில் காய்களாக உள்ள மக்கள் எந்தெந்த மனப்பான்மையில் இருக்கின்றார்கள்; அவர்கள் யார் பக்கம வெற்றியைச் சாய்ப்பார்கள் என்பதை முன்னமேயே கணித்துக் கொள்வது மிகவும் கடினம. ஆட்டத்தின இறுதி நேரத்தில் கூட விளையாட்டுக் காய்களாகிய மக்கள் தங்கள் தங்கள் விருப்பம் போல் செயல்பட்டு விடலாம். விளையாட்டுக் கவறாட்டத்தில் எதிராளிக்கும் நமக்கும் மட்டுந்தான் மூளை உண்டு; காய்களுக்கு மூளையில்லை. அரசியல் கவறாட்டத்திலேயோ எதிராளிக்கும் மூளையுண்டு; நமக்கும் மூளையுண்டு; நாம் வைத்து விளையாடும் காய்களாகிய மக்களுக்கும் மூளையுண்டு. இந்த மும் மூளைகளிலிருந்து எழும் உணர்ச்சிப் பெருக்கு எந்தெந்தக் கோணங்களில், எவ்வெவ்வளவு அழுத்தத்துடன் செயல்படுகின்றது என்பதை அறிந்து கொள்வதென்பது பெரும பெரும் அரசியல் கவறாடிகளுக்கே கடினமானது. இன்னொரு தெளிவான வேற்றுமையும் அரசியலுக்கு உண்டு. அஃது என்னவென்றால் விளையாட்டுக் கவறாட்டத்தின் முழுப்பகுதியிலும் ஆடுவோர்களே காய்களை ஆட்டிப் படைக்கின்றார்கள். அரசியலிலோ சில நேரங்களில் காய்களும் ஆடுவோர்களை ஆட்டிப் படைக்கின்றன. விளையாட்டுக் கவறாட்டத்தில் ஆட்ட அறிவில்லாதவன் ஆட்ட அறிவு உள்ளவனோடு விளையாடினால் கட்டாயம் தோற்றுத்தான் போவான் என்பதை உறுதியாகச் சொல்லி விடலாம். ஆனால் அரசியல் கவறாட்டத்திலோ சில நேரங்களில் ஆட்ட அறிவு நிறைந்தவன் கூட, ஆட்ட அறிவு இல்லாதவனிடம் படுதோல்வி அடைந்து விடலாம். எனவே மொத்தத்தில் கூட்டிப் பெருக்கி வகுத்துக் கழித்துப் பார்த்தால் விளையாட்டுக் கவறாட்டத்தை விட அரசியல் கவறாட்டம் என்பது மிகவும் கவடு நிரம்பியதாகும்; ஏமாற்று நிரம்பியதாகும்; போலித்தன்மை மிகுந்ததாகும். இந்த உண்மைகளை அப்படியே அண்மையில் நடந்த அரசியல் பொதுத் தேர்தலுக்கு வைத்துப் பார்த்தால், நாம சொல்வது எத்தனை வகையில் பொருத்தமானது என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

இனி, இதை ஒருவாறு விடுத்து நம் நாட்டில் நடந்த பொதுத் தேர்தலையும், அதில் ஈடுபாடு கொண்ட பொதுமக்களையும் கணித்துப் பார்ப்போம். இப்பொழுதைய நம் இந்திய நாட்டின் மக்கள் தொகை ஏறத்தாழ 52 கோடியாகும். அதில் இந்தத் தேர்தலில்

கலந்து கொள்ள உரிமை பெற்றவர்கள் மட்டும் ஏறத்தாழ $24\frac{1}{2}$ கோடி மக்களாகும். ஆனால் தேர்தலில் கலந்து கொண்டவர்களோ ஏறத்தாழ 15 கோடி மக்கள்தாம். மிகுதியுள்ள $9\frac{1}{2}$ கோடி மக்களும் இந்தநாட்டு அரசியல் அமைப்பைப் பற்றி அக்கறையற்றவர்களாவர். மொத்தத்தில் பார்த்தால் 52 கோடி மக்களின் வாழ்வு முறையைப் பற்றி அக்கறை கொண்டவர்கள் ஏறத்தாழ நாலில் ஒரு பங்கினர்தாம். இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் தேர்தலில் தங்களுக்குள்ள மக்கள் உரிமையைக் கொட்டு முழக்கோடு பயன்படுத்திய இந்த 15 கோடி மக்களிலும் ஏறத்தாழ 83 இலக்கம் பேர் போட்ட ஒப்போலைகள் செல்லத்தக்கனவாக இல்லை. அஃதாவது இந்த 83 இலக்கம் பேர்களுக்கும் ஒப்போலை கூடப் போடத் தெரியவில்லை. இப் புள்ளி விளக்கங்களை வைத்துக்கொண்டு பார்த்தால் இந் நாட்டில் உள்ள 14 கோடி மக்கள்தாம், இந் நாட்டில் உள்ள 52 கோடி மக்களின் வாழ்க்கையைப் பற்றிக் கணிக்க வேண்டியுள்ளது (இந்த14கோடி மக்களிலும் ஓரளவு கல்வி அறிவு பெற்று அரசியலைப்பற்றி ஓரளவு கருத்துக்கூறும் அறிவுடையவர்கள் நம் நாட்டுக் கல்வி வளர்ச்சியின் விழுக்காட்டுப்படி ஏறத்தாழ $2\frac{1}{2}$ கோடி மக்களே ஆவர்.) ஆக இந்த 14 கோடி மக்களின் அறிவழுத்தம் எப்படி எப்படி இருக்கின்றதோ, அப்படி அப்படி இந் நாட்டு அரசியல் மாறிக்கொண்டு இருக்கின்றது என்பதை முதலில் நாம் நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இனி, அடுத்தபடி நம் நாட்டின் குடியரசு முறையில் ஒருபெரிய குறைபாடு என்ன வென்றால், இங்குள்ள அரசியல் அடிப்படை உரிமைகள் எல்லாருக்கும் பொதுவாக-பொது அளவினவாக வகுக்கப் பட்டிருப்பதே ஆகும். மேலோட்டமாகப் பார்ப்பவர்க்கு இதுதான் சரி என்று தோன்றும். இன்னுஞ் சொன்னால் இப்படி அமைந்திருப்பதுதான் குடியரசு முறைக்கே உரிய சிறப்பு என்றுகூடச் சொல்லத் தோன்றும். ஆனால் உண்மை இதுவாக இருக்க முடியாது. ஒரு குடியரசு நாட்டில் உள்ள மக்களுக்கு வாழ்வியலின் அடிப்படை உரிமைகளே எல்லாருக்கும் பொதுவாக இருக்குமாறு அமைத்தல் வேண்டும். அஃதாவது உணவு, கல்வி, வாணிகம், குடியிருப்பு, முன்னேற்றம் முதலிய யாவும் வாழ்வியலின் அடிப்படை உரிமைகள். இவற்றில் மக்களுக்குள் எந்த வேறுபாடும் இருத்தல் கூடாது. ஆனால் இந்த உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் ஒன்றுபோல் கருதிவிடக் கூடாது. இந்த அரசியல் உரிமைகளையும் அரசியல்

தேர்ச்சி உரிமைகள், அரசியல் ஆட்சி உரிமைகள் என இருவகையாகப் பிரித்து அரசியல் ஆட்சி உரிமைகளை மட்டும் எல்லா மக்களுக்கும் பொதுவினவாக ஆக்கிவிட்டு, அரசியல் தேர்ச்சி உரிமைகளை மட்டும் அவரவர் கல்வி அறிவுக்கும் பொது அறிவுக்கும் தக்கபடி அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு அன்றிக் குடியரசு என்றாலே எல்லாமக்களும் சேர்ந்து அரசியலைத் தேர்ந்து கொள்வது என்றால் அதில் அரசியலின் சிறப்பான வளர்ச்சியைப் பற்றிப் பேசுவதற்கே இடமில்லை. இதை வெளிப்படையாக – பச்சையாகச் சொன்னால் நாம் இன்னும் அரசியலில் நாகரிகம் அடையவில்லை எனலாம். நம் அரசியல் இன்னும் கூர்தலற (பரிணாம) வளர்ச்சி அடையவில்லை.

மேலே சொன்ன கருத்துகள் நாம் எடுத்துக் கொண்ட தலைப்பிற்குச் சற்று உள்ளடங்கியவாகலின், மேலோட்டமாக அறிந்து, மேலோட்டமாகக் கைக்கொண்டு, மேலோட்டமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்குச் செரிப்பதற்குச் சிறிது கடினமாகும். ஆனாலும் நாம் எதையும் சரியாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும் என்பதற்காக நாம் அவற்றைக் கூறினோம். அக்கருத்துகளையொட்டியே நாம் ஆயவேண்டியவை பலவாகும். ஆனால் அவைபற்றித் தேவை வருமிடத்து மிக மிக விரிவாகப் பேசுவோம். இக்கால் அண்மையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலைப் பற்றியும் அதனால் இவ்விந்திய நாட்டின் அரசியல் விளைவுகள் பற்றியும், அவற்றில் தமிழ்நாட்டின் அரசியல் மாற்றம் குறித்தும், அவற்றின் அடிப்படையில் இனி அமையப் போகும் அடுத்த ஐந்தாண்டுக்கால அரசியல் வாழ்வு பற்றியும் ஒருசில கூறுவோம்.

உலக நாடுகளின் அரசியல் போக்கோடு நம் நாட்டின் அரசியல் போக்கையும் பொருத்திப் பார்த்தால், பிற நாடுகளின் அரசியல் அமைப்பு முறைகளில் போட்டி போட்டுக் கொண்டு தலையிடுவோர் பெரும்பாலும் அரசியல் அறிஞர்களே. ஆனால் நம் நாட்டில் மட்டும் போட்டிகளில் ஈடுபடுவன பெரும்பாலும் அரசியல் கட்சிகளே. மேனாடுகளில் அரசியல் கட்சிகள் மிகவும் குறைவு. ஆனால் நம் நாட்டின் அரசியலையே குட்டைகாக் குழப்பிக் கொண்டிருப்பன பெரும்பாலும் இந்நாட்டு அரசியல் கட்சிகளே. மேனாடுகளில் அரசியல் நடப்புக்காகக் கட்சிகள் அமைக்கப்படுகின்றன. இங்குக் கட்சிகளின் அமைப்புக்காக அரசியல் நடத்தப்படுகின்றது. மேனாடுகளின் அரசியலில் தனிப்பட்டவரின் அரசியல் கருத்துகள், ஒரு கட்சியின் கருத்துகளை

விட மிகுதியும் மதிக்கப் பெறுகின்றன. நம்நாட்டில் தனிப்பட்டவரின் கருத்துகளுக்கே மதிப்பில்லை. கட்சிகளின் கருத்துகளுக்கே மதிப்பு. அங்கு நடப்பது அரசியல்; இங்கு நடப்பது கட்சியியல். நம் நாட்டில் இந்தப் பொதுத் தேர்தலில் மட்டும் இருபத்தேழு கட்சிகள் கலந்து கொண்டன என்ருல் பார்த்துக் கொள்ளுங்கள். இதில் இன்னொரு வியப்பு என்னவென்ருல் இக்கட்சிகள் முழுவதும் அரசியல் கட்சிகள் அல்ல. சில கட்சிகள் முதலாளிகளுக்காக அமைந்தவை; சில தொழிலாளர்களுக்காக அமைந்தவை; சில உழவர்களுக்காக அமைந்தவை; சில குல முறைகளை அடிப்பற்றியவை; சில சமயவெறிகளை அடிப்பற்றியவை; சில இனமுறைகளை அடிப்பற்றியவை; சில மொழிகளுக்காக அமைந்தவை; சிலவோ தேர்தலுக்காகவே அமைக்கப் பட்டவை. ஆனல் இவற்றில் அரசியலுக்காக அமைந்த கட்சிகள் மிக மிகக் குறைவான எண்ணிக்கை உடையவையே. அரசியலுக்காக அல்லாமல் இனத்துக்காகவும், குலத்துக்காகவும், சமயத்துக்காகவும், மொழிக்காகவும், அரசியல் தொடர்பற்ற பிற காரணங்களுக்காகவும் அமைந்த இக்கட்சிகள், அரசியலுக்காகப், போட்டியிட்டு மக்களை மடயர்களாக்குவது எதற்காக என்றுதான் நமக்குப் புரியவில்லை. தெளிவாகச் சொன்னல் நமக்கு அரசியலிலும், பொருளியலிலும், குமுகாயவியலிலும் எத்தனை எத்தனை கருத்துகள் உள்ளனவோ அத்தனை அத்தனைக் கட்சிகள் நம் நாட்டில் உள்ளன. இன்னும் வியப்பு என்னவென்ருல் ஒரே காரணத்திற்காக அல்லது விளைவிற்காக இரண்டு மூன்று கட்சிகள் கூட நம் நாட்டு அரசியலில் உருவாக்கப்பட்டுள்ளன. ஏலச் சீட்டுக் காரர்கள் போல் அமைந்த இப் பல்வேறு வகையான குழப்பக்காரர்கள் எப்படித்தான் சரியான அரசியல் அமைப்பை உருவாக்கி விடமுடியும் என்று கருதிக் கொண்டிருகின்ருர்களோ என்பதுதான் நமக்குப் புரியாத புதிர். இப்படி இருப்பதைத்தான் குடியரசின் சிறப்பான அமைப்பு என்று வேறு இவர்கள் பிதற்றிக் கொள்வதுதான் நமக்கு நகைப்பாக இருக்கின்றது.

பொது மன்றங்களிலும், அறிஞர் அவைகளிலும் பேசித் தீர்க்க வேண்டிய பல கருத்துகளை இவர்கள் சட்ட மன்றங்களிலும், பாராளு மன்றங்களிலும் போய்ப் பேசித் தீர்த்துக்கொள்ள முனைகின்றனர். இஃது இந் நாட்டின் அரசியல் அறியாமையை உணர்த்துமேயன்றி, குடியரசின் வளர்ச்சியை—அரசியலின் கூர்தலற வளர்ச்சியை உணர்த்தாது. நீச்சல் போட்டிக்குப் போகின்ற ஒருவன், கையில்

சுரைக்குடுவையை எடுத்துச் செல்வதுபோல், விடைகளைத் தெரிந்து கொண்டு தேர்வுக்குப் போகவேண்டிய ஒருவன் வினாக்களை மட்டும் தெரிந்து வைத்துக்கொண்டு தேர்வுக்குப் போவது போல் – அரசியல் சிக்கல்களை அறுத்துத் தீர்க்க வேண்டிய அறிவோடு ஆட்சி நாற்காலி யில் அமர வேண்டிய இவர்கள், அச் சிக்கல்கள் விழுந்த கயிறுகளையே எடுத்துக் கொண்டு போய், சட்டமன்ற, பாராளுமன்ற நாற்காலிகளில் அமர்ந்து கொண்டு, முடிச்சுகளை அவிழ்க்க முற்படுகின்றார்கள் என்றால் இவர்களின் அரசியல் நாகரிகம் வாய்ந்தது; கூர்தலற (பரிணும) வளர்ச்சியுற்றது என்று எவ்வாறு கூறுவது? இவ் வகையில் இங்குள்ள அறிஞர் எனப்படுவோரும், மடயர் எனப்படுவோரும் ஒரே சட்டியிலேயே வெந்த கொழுக்கட்டைகளாகவே இருக்கின்றனர் என்று சொல்லலாம்.

மாட்டைக் கடவுளாகக் கும்பிட வேண்டும் என்று ஒரு கொள்கை; அல்லது சண்டித்தனம் என்று வைத்துக் கொள்வோம். இதை வைத்துக் கொண்டு பாராளுமன்றத்தில் போய்ப் பேசிக் கிழிக்க வேண்டியதில் என்ன இன்றியமையாமை இருக்கின்றது? 'மாட்டைக் கும்பிட வேண்டும் என்றாலோ, பன்றியைக் கும்பிட வேண்டும் என்றாலோ நீ கும்பிட்டுக் கொண்டு போயேன்; உன்னை யார் கும்பிட வேண்டா என்று சொன்னது? அதற்காக நீ ஏன் பாராளுமன்றம் போக வேண்டும் என்கிறாய்?' என்று கேட்க இந்த நாட்டின் 25 கோடி ஒப்பு (வாக்கு) உரிமைக் காரரில் ஒருவர் கூட இல்லையென்றால் இந் நாட்டில் குடியுரிமை எதற்கு? என்ன பயனைக் கருதிக் குடியரசு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டோம்?

தேர்தல் நேரத்தில் எவன் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எவரை வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாம் என்றால் – அப்படி நடந்தது என்றால் இந் நாட்டில் எதற்குக் குடியரசுரிமை? எவர் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம் – பேசலாம் என்பது முடியரசின் இறுதிக் கொள்கையாகும். இவ்விறுதிக் கொள்கையை அடுத்தே குடியரசு அமைப்பு தொடங்குகிறது. இப்படிப் பார்த்தால் நாம் தொடங்கிய இடத்திலேயே நின்று கொண்டிருக்கின்றோம் என்பதே பொருளாகுமன்றி, அரசியல் வளர்ச்சி பெற்றுள்ளோம் என்பது பெரிய ஏமாற்று ஆகும். நம் நாட்டை விட மிகவும் சிறிய நாடும் – ஆனால் அறிவில் பெரிய நாடும் ஆன சப்பான் நாட்டில் கூட மேடையேறித் தேர்தல் பற்றிப்

பேச வேண்டும் என்றால், 200 பக்கங்களில் எழுதப்பட்டுள்ள ஒழுங்கு அமைப்புகளுக்கு உட்பட்டே பேசியாக வேண்டும் என்று வகுத்திருக்கின்றார்கள். இங்கோ எதை வேண்டுமானாலும் அரசியல் சிக்கலாக்கி விடலாம். மழை பெய்ய வில்லையா? உடனே 'மக்களே! இந்த ஆட்சியில் பார்த்தீர்களா? மழையே பெய்ய வில்லை உடனே இதை அகற்ற வேண்டாவா?' என்று ஒருவன் பேசலாம். மழை பெய்து இவன கட்டிய வீடு ஒழுகுகிறது என்று வைத்துக் கொள்வோம். உடனே, மக்களிடம் போய், 'பார்த்தீர்களா? மக்களே! இந்த ஆட்சியில் ஒழுகல் வீடு; இதை எப்படிப் பொறுத்துக் கொள்வது?' என்று பேசலாம். கடைக்காரன் அழுகிய காய்கறிகளை விற்கின்றானா; உடனே ஒரு மேடை போடலாம். 'மக்களே! அழுகல் காய்கறிகளை மாற்ற வேண்டுமானால் ஆட்சியை மாற்றுங்கள்!' என்று தொண்டை வறறக் கத்தலாம். கேட்பவர்களில் 'ஆமாம், அரசு என்றால் இதையெல்லாம் கவனிக்க வேண்டாவா?' என்று உங்களுக்குப் பரிந்து கொண்டு வருவதற்கு ஏராளமான மக்கள் இங்கே இருக்கின்றார்கள். ஒருவன் வயிறு வெடிக்கத் தின்றுவிட்டு, மலச்சிக்கலால் தொல்லைப்பட்டானா? உடனே இந் நாட்டு அரசியல் கட்சித் தலைவனிடம் அதைப் போய்ச் சொல்லி விட வேண்டியதுதான். உடனே அவன் மலச்சிக்கலை அரசியல் சிக்கலாக ஆக்கிவிடுவான்;உயரத்தில் மேடை போட்டுக்கொள்வான்;விளக்கு ஏற்றுவான்; ஒலிபெருக்கிகள் பத்துப் பன்னிரண்டைக் கட்டுவான். தொண்டையைத் தீட்டிக் கொள்வான். "மக்களே! இந்த நாட்டின், இந்த அரசு தருகின்ற உணவுப் பொருள்களைத் தின்றால் சரியாக வெளிக்குக் கூட வரமாட்டேன் என்கின்றது. இதோ இங்கிருக்கின்ற தோழர்-பொதுநலத் தொண்டர் நான்கு நாட்களாக வெளிக்குப் போகவில்லை. வெளிக்குப் போகலாம் என்றாலும் கழிவகம் (கக்கூசு) எங்கே இருக்கின்றது? கழிவகம் இருந்தாலும் அதில் குழாய்தான் இருக்கிறதா? இல்லை தோழர்களே இல்லை. ஒரு வேளை தப்பித்தவறிக் குழாய்தான் இருக்கிறது என்றாலும் அதில் தண்ணீர் எங்கே வருகின்றது? ஒருவேளை தண்ணீர் வருகிறது என்றாலும் அதுவும் சொட்டுச் சொட்டாகவன்றோ வருகின்றது. அட, அதுவாகிலும் வருகின்றதே என்றால் அதில் மீனுமல்லவாவருகின்றது. இதோ பாருங்கள், எங்கள் வீட்டுக் குழாயில் வந்த மீனை! சரி! மீன் வந்தால் நல்லதுதானே என்று அதைச் சமையலுக்காவது பயன்படுத்தலாம் என்றால் அது மருந்து போட்டதால் செத்தன்றோ கிடக்கின்றது. இல்லை, அது நல்ல மீனாகவே இருக்கட்டுமே! அதை

வறுக்க எண்ணெய்தான் எங்குக் கிடைக்கின்றது? மிளகாய், புளி, உப்பு விலை இவற்றைப்பற்றி உங்களுக்கெல்லாம் தெரியாதா? அப்படித்தான் அவையும் கிடைப்பதாக வைத்துக் கொள்ளுவோம். மீன் குழம்பு வைத்து விட்டுச் சோற்றுக்கு எங்கே போவது? அரிசி கிடைக்கிறதா? இப்பொழுதே நீங்கள் சாப்பிடுகின்ற கோதுமை வறட்டியில் ஒன்று அமெரிக்காவினுடையது; ஒன்று உருசியாவினுடையது. ஒன்றில் அரைப்பகுதி உமி; அரையில் கால்பகுதி கல்; காலில் பாதி மண்! இவற்றைத் தின்றால் மலச்சிக்கல் ஏற்படாதா தோழர்களே! எனவே இச் சிக்கல்கள் எல்லாம் அகல, உடனே நீங்கள் செய்ய வேண்டுவது உங்கள் ஒப்போலையை(வாக்கை)எங்கள் 'மண்வெட்டி'க் கட்சிக்கே போடவேண்டும். மண்வெட்டியின் பெருமை உங்களுக்குத் தெரியாததில்லை. மண்வெட்டி உழவுக்கே அடிப்படை. 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்றார் வள்ளுவப் பெருந்தகை. அவ்வுலகத் திற்கே அச்சாணி உழவு என்றும் அவரே உரைத்திருக்கின்றார். அப்படிப்பட்ட உழவுக்கே அடிப்படை மண் வெட்டிதான். அதன் பெருமை சொல்லுந்தரமன்று. அதைப்பற்றி நீண்ட ஒரு பாட்டை எங்கள் கட்சியின் கண்மணிப் பாவலர் திருவாளர். இறல் அவர்கள் எழுதிவைத்துள்ளார். அதைக் கூட்டத்தின் இறுதியில் பாடிக் காட்டுவார். ஒவ்வொருவரும் அதை நின்று கேட்டுவிட்டுத்தான் போவீர்கள் என்று எனக்குத் தெரியும் 'என்று அடித்தொண்டையில் கத்துவான். நம் நாட்டின் அரசியல் போராட்டங்களின் உருவகம் இது. வெறும் நகைச்சுவையாக எழுதப்பட்டதன்று. இரங்கலோடும் அழுங்கலோடும் எழுதிய உண்மை.

இப்படிப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்களும், அவர்கள் ஓட்டிச் செல்லும் மக்களும் நிரம்பிய நாடுதான் இவ்விந்திய நாடு. இந் நாட்டின் குடியரசில் உள்ள அடிப்படைக் குறைபாடுகள் களைந்தெடுக்கப் பட்டு மக்கள் மனப்பாங்கு உடையவர்களாக ஆக்கப் பட்டாலன்றி, இங்கு நடக்கும் பொதுத் தேர்தல் வழிக் கட்சிகள் அடையப்பெறும் வெற்றிக்கும் வெற்றியென்று பெயரில்லை. தோல்விக்கும் தோல்வி என்று பெயரில்லை. அப்படிப்பட்ட வெற்றி தோல்விகளால் ஏற்படும் பயனுக்கும் பயன் என்று பெயரில்லை. தங்களுக்குக் கொடுத்திருக்கின்ற ஒப்போலை உரிமையின் பொறுப்பை எப்படி மக்களில் ஒரு பகுதியினர் பயன்படுத்திக் கொள்ளவில்லையோ, அப்படியேதான் இவர்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்ற தலைவர்களும் தங்களுக்கிருக்கும்

பொறுப்பை உணர்ந்து செயல்பட மாட்டார். தவறான மக்கள் தங்கள் தவறான போக்குக்குத் துணையாகவுள்ள தவறான தலைவர்களையே தேர்ந் தெடுப்பர். இவ்வுண்மை நேற்றைக்கும் இன்றைக்கும் நாளைக்குந்தான்.

இனி, நடந்து முடிந்த தேர்தலின் பொதுவான முடிவுகள் எல்லா ரையும் வியப்பில் ஆழ்த்தின. நாட்டின் பெரிய அமைப்பான பேராயக் கட்சி சில மாநிலங்களில் படுதோல்வி யடைந்தது. நாட்டின் பதினாறு மாநிலங்களில் எட்டு மாநிலங்களில்தான் அது வெற்றி பெற்றிருக் கின்றது. எட்டு மாநிலங்களில் தோல்வியுற்றிருக்கின்றது. அதன் வெற்றியில் தோல்வியும், தோல்வியில் வெற்றியும் கூடக் கலந்திருக் கும். இவ் வெற்றி தோல்விக்கு எல்லா மாநிலங்களிலும் பல்வேறு அரசியல், இன, மொழி, சமயச் சிக்கல்கள் காரணமாகும். மொத்தத் தில் ஏறத்தாழ 15 கோடித் தேர்வாளர்களில் ஏறத்தாழ $5^1/_2$ கோடி மக்கள் பேராயக் கட்சியை விரும்பியிருக்கின்றனர். இதற்கடுத்தபடி யாக நிற்கும் மக்களணி–என்ற சனசங்கம் ஏறத்தாழ $1\frac{1}{4}$ கோடித் தேர்வாளர்களின் அன்பைப் பெற்றிருக்கின்றது. சட்டமன்றத்தின் மொத்தத் தொகுதிகள் 3352-இல் இதுவரை 1690 (பாதிக்கு மேல்) தொகுதியைப் பேராயக் கட்சி கைப்பற்றியுள்ளது. பாராளுமன்றத் தொகுதிகள் 521–லும் இதுவரை பாதிக்குமேல் கைப்பற்றியுள்ளது. பிற 26 கட்சிகளும் சேர்ந்து மிகுதியுள்ள இடங்களை ஆளுக்குக் கொஞ்சமாகப் பகிர்ந்து கொண்டுள்ளன. இம்முடிவுகள் சென்ற தேர்தல் முடிவுகளை விடக் குறைத்திருப்பதையும் கவனிக்க வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்குமிடத்துப் பேராயக் கட்சியின் நடுவண் அரசியல் அமைப்பு நிலையாக நிற்கின்ற தென் றும் மாநில அரசியல் அமைப்பே வலுக்குறைந்துள்ளது என்றும் கூறலாம். அவ்வாறு அதன் வலுக்குறைந்த மாநிலங்கள் தமிழகம், பீகாரம், இராசத்தானம், உத்தரப்பிரதேசம், ஓரியம், பஞ்சாபு மேற்கு வங்காளம், கேரளம் முதலியன. இவற்றிலுங்கூட இராசத்தானத் திலும் பஞ்சாபிலும் ஏறத்தாழ போரயக்கட்சி தன் நிலையைச் சரிகட்டிக் கொண்ட தென்றே கூறலாம். ஆனால் மீதி ஆறு மாநிலங்களிலும் 5–இல் எதிர்க்கட்சியின் கூட்டணியே அரசமைக்கும். தமிழகத்தில் மட்டுந்தான் தனிக்கட்சியரசாகத் திராவிட முன்னேற்றக் கழகம் அரசமைக்கும்.

தமிழகத்தின் இந்த அரசியல் மாற்றம் இந்தியாவையும் உலகத்த வரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. அதுவுமன்றிப் பேராயக் கட்சி

பின் தற்பொழுதைய தலைமையையே தோற்கடித்துள்ளது தமிழகம். உலகினர் யாவர்க்கும் அதிர்ச்சியும், வியப்பும், ஏற்படுத்திய இத் தமிழக அரசியல் அமைப்பு, நாம் முற்பகுதியில் கூறப் பெற்ற கட்சி அமைப்பின் உப்புச் சப்பற்ற போலியரசியல் போக்கில் அமைந்தது தான் என்றாலும், இதில் பல சிறப்பான உண்மைகளும் உள்ளடங்கியுள்ளன.

தமிழகத்தின் 234 இடங்களில் பேராயக்கட்சி ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கையும், தி. மு. க ஐந்தில் $2\frac{3}{4}$ பங்கையும் கைப்பற்றி உள்ளது. எனினும் தமிழகத்தின் தேர்வாளர்களில் 63, 72, 826 பேர் பேராயக் கட்சியையும் 62, 15, 143 பேர் தி. மு. க வையும் விரும்பியிருக்கின்றனர். மீதியுள்ள 32, 85, 772 பேரும் இங்குள்ள 9 கட்சிகளேயும 207 தனி வேட்பாளர்களேயும் விரும்பியுள்ளனர். இந்தக் கணக்குப்படி பார்த்தால், பிற கட்சிகளையும் தி. மு. க வையும் விட 1,60,683 பேர் மிகுதியாகப் பேராயக் கட்சியை விரும்பியும் அக்கட்சி அரசியலே அமைக்க முடியாமல் போயிருக்கின்றது. காரணம் பேராயக் கட்சி அத்தனே ஒப்போலேகளேப் பெற்றிருந்தாலும் அதற்குக் கிடைத்த இடம் 49 தான். தி. மு. க விற்குக் கிடைத்த இடம் 138. (போட்டியிட்டுப் பெற்ற இடங்கள் மிகுந்தும் குறைந்தும் இருப்பதால் பிழையில்லே) இக் கணக்கின்படி இட எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால் வெற்றி பெற்ற கட்சி தி. மு. க; தேர்வாளர்களின் எண்ணிக்கைப்படி பார்த்தால் வெற்றி பெற்ற கட்சி பேராயக் கட்சி. இந்நிலேயை வேருேர் உவமையொடு பொருத்திப் பார்த்தால்தான் உண்மை விளங்கும்.

இரண்டு மாணவர்கள் உள்ளனர். ஒருவர் ஆங்கிலம் 80, அறிவியல் 60, கணக்கு 50, வரலாறு 80, தமிழ் 15, இந்தி, 90 என்று எண் வாங்கியுள்ளாரென வைத்துக் கொள்வோம். இன்னெருவர் ஆங்கிலம் 40, அறிவியல் 60, கணக்கு45, வரலாறு45, தமிழ்40, இந்தி 35 என்று வாங்கியுள்ளாரென வைத்துக் கொள்வோம். முதல் மாணவர் நன்ருகப் படிப்பவர் என்றாலும், மொத்தத்தில் 375 எண் பெற்றிருந்தாலும் தேர்வில் தோல்வியுற்றவராகவே கருதப்படுவார். ஏனெனில் அவர் தமிழில் குறைந்த எண் பெற்றுள்ளார். இரண்டாவது மாணவர் பொதுவாகப் படிப்பவர் என்றாலும், மொத்தத்தில் 265 எண்கள் (அஃதாவது முதல் மாணவரை விட 90 எண்கள் குறைவாகப்) பெற்றவரானாலும் அவர் தேர்வில் வெற்றி பெற்றவராகவே கருதப்படுவார். இந்த இரு மாண

வர்களையும் பேராயக்கட்சி மாணவராயும், தி. மு. க. மாணவராயும் பொருத்திப் பார்த்துக் கொண்டால் நாம் கூறுகின்ற உண்மை எளிதில் விளங்கும்.

இவ்வாறு மொத்தத்தில் மிகுந்த எண் பெற்றுத் தோற்பதும் குறைந்த எண் பெற்று வெல்வதுமான நம் பள்ளித் தேர்வு முறை எப்படிப் பிழை வாய்ந்ததோ, அப்படியே நம் நாட்டுத் தேர்தல் முறையும் பிழை வாய்ந்ததே! சரியானது போல் நமக்குத் தோற்றமளிக்கும் இப் பிழையான இரண்டு தேர்வு முறைகளிலும் நம் கண்ணுக்குத் தெரியாமல் எங்கோ உண்மை ஒளிந்திருக்கின்றது. சரியாக இருப்பது தவறாகக் கருதப்படுவானேன்? தவறாக இருப்பது சரியென்று தோப் படுவானேன்? இதற்குப் பெயர்தான் அரசியல்! இதைப்போல் உள்ள குறைபாடுகள் ஏராளம். இதுபற்றிப் பின்னர் விரிவாக எழுதுவோம். எனவே, இத்தகைய அரசியல் கவறாட்டத்தையெல்லாம் நாம் கண்டு பிடித்துத் திருத்திக் கொள்ளாத வரை, தி. மு. க விற்குக் கிடைத்த வெற்றி வெற்றியுமன்று; பேராயக் கட்சிக்குக் கிடைத்த தோல்வி தோல்வியுமன்று.

இனி, கணித முறையாகப் பார்த்த இவ்வுண்மையை அறிவியல் முறையாகக் கொஞ்சம ஆராய்ந்து பார்ப்போம். முதல் மாணவன் தோற்றுப் போனதற்கு எப்படித் தமிழில் எண் குறைந்தது காரணமோ, அப்படியே பேராயக்கட்சி தோற்றுப் போனதற்கும் தமிழ்தான் காரணம். நடுவணரசு மொழித் துறையில் கடைப்பிடித்த கொள்கை தமிழகத்திற்குப் பொருந்துவதன்று. பிற மாநிலங்களில் ஏற்கப்படுகின்றதே என்றால், அந்தப் பிற மாநிலங்கள் மொழியைப் பொருத்த மட்டில் உமியை ஊதி அரிசி பொறுக்குகின்றன. தமிழ் மாநிலத்தில் அரிசியில் கலந்த உமியைப் புடைக்கமட்டுந்தான் வேண்டியுள்ளது. தமிழ் அரிசி போன்றது; இந்தி போன்ற பிற மொழிகள் உமியில் அரிசி போன்றன. எனவே அவர்கள் நடுவணரசின் பாதி அரசி பாதி உமி விற்கும் வாணிகத்தை வரவேற்பார்கள். தமிழர் முழுமையும் அரிசியாக வைத்துக் கொண்டிருப்பவர்கள் அதை வெறுக்கத்தான் செய்வர். மொழியடிப்படையில் கவனிக்க வேண்டியதைக் கவனிக்கத் தவறிய நடுவணரசின் இந்தி வெறியும், அதைத் தடுத்து நிறுத்தாத பேராயக்கட்சின் ஆளுமையும் தமிழகத்தில் தகர்த் தெறியப் பட்டன. இந்திக்குத் துணை நின்ற தலைவர்கள் முகங்களில்

கரிபூசப்பட்டது. அக் குறைபாட்டால் ஆள்பவர் மேல் இருந்த மனக் குறை, அருகிலிருந்தவர்மேல் விருப்பமாகக் கனிந்தது எனலாம். பெண்ணுக்கு மணம் பேசப்பட்டவன், மண நாளில் பெண்ணைத் தாழ் வாகக் கருதினால், அவனை விலக்கிவிட்டு மாப்பிள்ளைத் தோழனையே மணமுடித்து விடுவது போன்ற நிகழ்ச்சியைப் போன்றதாகும் இது.

பேராயக்கட்சி தமிழைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. கவலைப் பட்டதெல்லாம் தமிழுக்கு வலியேற்படாமல் இந்தியை எப்படி நுழைக் கலாம் என்பதைப் பற்றியே. பேராயக்கட்சியரசின் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் தமிழர் இனத்துக்கே வந்து சேர்ந்த ஒரு பெரும் பழி. அவரைத் தலைகீழாகச் சாய்த்தது தி. மு. கவின் முதல் வெற்றி. அவரும் அவரைச் சார்ந்த பேராயக் கட்சிக்காரர் ஒருசிலரும் வட வர்க்குக் கங்காணிகளாக இருந்து இந்தியைப் புகுத்த அரும்பாடு பட்டனர். திரு. காமராசரும் அம்முயற்சிக்குத் தடையிடாமல் வாளா விருந்தார். காமராசருக்குத் துணை போகும் பெரியாரும் தமிழில் என்ன இருக்கின்றது; ஒன்றுமே இல்லை என்று கூறிக்கொண்டே அரசியல் மட்டத்தில் தம் கருத்துகளைப் பரப்பினார். மக்களுக்கு உள்ளுரமாக நின்று, அவர்களின் போக்கிற்குத் துணை நிற்பதில் தாய்மொழிக்கு இணையானது வேறொரு கருவி இல்லை என்னும் கருத்து எல்லாருக்கும் பகடியாகவும் ஏளனமாகவும் இருக்கின்றது. அவர்கள் உள்ளிட்ட எல்லாருக்கும் நாம் சொல்லிக் கொள்ள விரும்பு வது இது: தமிழ் வளர்ச்சியைத் தலையாகக் கொள்ளாமல் தமிழர் குமுகாயத்திற்கு நன்மை செய்துவிட முடியாது. அப்படி முயன்றால் அது விழலுக்கிறைத்த நீராகவே முடியும் என்பதை அவர் நன்றாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இஃதன்றிப் பேராயக் கட்சியில் உள்ள அடித்தொண்டர் முதல் பெருந்தலைவர் வரை தமிழறிஞர்களை மதித்ததாகத் தெரியவில்லை. சீரும் சிறப்பும் கொண்ட ஒரு மொழி வழங்கும் நாட்டில் அந்த மொழியறிஞர்கள் தாழ்வாகக் கருதப் படுகின்றார்கள் என்பது உலகில் வேறெங்கும் காணப்படாத ஒரு கொடுமை. தமிழ் நாட்டின் போக்கை அமைப்பதில் முன்னோடியாகத் தம்மைக் கூறிக்கொண்ட பக்தவத்சலமோ தமிழுக்கும் தமிழர் இனத் துக்கும் செய்த இரண்டகச் செயலைத் தமிழர் என்றும் மறவார். அவர் போக்கு ஆரியத்தை மறைமுகமாகவே வளர்க்க உதவியது. அப்படிப்பட்ட போக்கால் தம்மை நிலைப்படுத்திக் கொள்ளவே அவர் பெரிதும் முயன்று வந்தார். கடந்த ஆண்டில் இந்தியெதிர்ப்பின்

பொழுது அவர் நடந்து கொண்ட செயல் அவர் இரக்கமற்றவர்; வன்கண் உடையவர் என்றே மக்களை நினைக்கும்படி செய்தது. ஆனால் நடுவண் அரசினர் பாங்கில் அவருக்குக் கிடைத்ததோ 'பாறைநெஞ்சினர்' என்ற பாராட்டுதான். ஆம்! தம் இன மக்களின் உள்ளுணர்வைப் புரிந்து கொள்ள முடியாத அவர் பாறை நெஞ்சினர்தாம்! திரு. பக்தவத்சலம் இராசாசியின் கையாள். அவர் தோற்றதில் இராசாசிக்கு உள்ளூர வருத்தமென்றாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமலேயே இராசாசி இருந்து விட்டார். இத்தகைய கேடர்களால் பேராயக்கட்சி பிற பாடங்களில் நல்ல எண்களைப் பெற்றாலும் தமிழ்ப் பாடத்தில் நல்ல எண் எடுக்கத் தவறிவிட்டது. இதுவன்றி விலைவாசி நிலைகளும் பொது மக்களை வெறுப்புக் கொள்ளச் செய்தது எனவே தேர்வில் தோல்வியுற்றது. இது பேராயக் கட்சியின் தோல்வியே தவிர, தி. மு கவின் வெற்றியில்லை.

எனவே தி. மு. க வின் வெற்றி நமக்கு அளிக்கும் மகிழ்வை விடப் பேராயக் கட்சியின் தோல்வி நமக்கு வருத்தத்தையே கொடுத்தது. காரணம் தமிழகம் கடந்த 20ஆண்டுகளில் பெற்ற மலர்ச்சியே. அதைக்காணின் பகைவரும் மகிழ்வர். கல்வி, தொழில், வேளாண்மை, வேலைவாய்ப்புகள் முதலிய இன்றியமையாத் துறைகளில் தமிழகத்திற்குக் கிடைத்த நன்மைகள் அளக்குந்தகையன அல்ல. உண்மை அரசியல் அறிவும், நடுநிலை உள்ளமும் கொண்ட எவரும் இதை மறுத்தல் முடியாது. தமிழகத்தின் முன்னேற்றங்கண்டு தங்கள் இனத்திற்கு எங்குத் தீங்கு வந்து விடுமோ என்று வயிறெரிந்து செத்துக்கொண்ருக்கும் திரு. இராசாசியைத் தவிர, அவர் பாங்கில் உள்ள திரு. அண்ணாத்துரை அவர்களுக்குக்கூட உள்ளூர மகிழ்ச்சி இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இம் மலர்ச்சிக் கெல்லாம் (பேராயக் கட்சியின் சார்பில் இருந்தாலும்) மக்கள் நலம் ஒன்றே குறிக்கோளாகவும், தமிழர் நலம் ஒன்றே உட்கிடையாகவும் உள்ள திரு. காமராசரும் பிற நல்லெண்ணக்காரர்களுமே காரணமாவார்.

மலர்ந்து வரும் தமிழ்நாட்டு நலமும், அதன் அடியாக வளர்ந்து வரும் தமிழர் நலமும் திரு.காமராசரால் வழிப்படுத்தப்பட்ட அமைப்புகளாகும். அவர் மொழித்துறையில் கொண்ட கருத்துகள் அல்லது அத்துறையில் நடுவணரசுக்குத் துணை நின்ற போக்கு நமக்கு—தமிழர்களுக்கு ஓரளவு கேடாக விருந்தாலும் அது பின்னர் சீரடையத்தக்க

தாக – திருத்திக் கொள்ளத்தக்கதாக இருந்து வந்தது. தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் அதன் எழுச்சி சிறு அளவினதாக இருந்தாலும், வலிவுள்ளதாக வளரத்தக்க அளவில் இருந்து கொண்டுதான் வந்தது. ஆனால் நமக்குக் கிடைத்த – கிடைக்க இருந்த குமுகாய, பொருளியல் நலன்களைப் பொறுத்த மட்டில், இதுவரை இவ்விடைக் காலத் தமிழக வரலாற்றிலேயே காண முடியாத ஒரு வளர்ச்சியைத் தமிழர் தடுத்துக் கொண்டதாகவே நம்மால் இப்பொழுதைக்குக் கருத முடியும். இம் முடிவை இக்கால் தலைமை யேற்றிருக்கும் தி. மு. க ஒருவேளை மாற்ற முடியும் என்றாலும், அதற்குள்ள வாய்ப்பு திரு. காமராசருக்குக் கிடைத்த வாய்ப்பை விடக் குறைந்ததாகவே இருக்கும் என்றே கருதவேண்டியுள்ளது. ஆதலால் பயனும் ஓரளவாகவே இருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை.

பார்ப்பனர் எப்பொழுதும் இரட்டைமுகம் படைத்தவர்கள் என்பது நம்மால் அறியப்பெறும் வரலாற்றறிவு. ஒருமுகம் ஆளுநர்க்குத் துணை போகும். இன்னொருமுகம் ஆளுநர்க்கு எதிர்ப்பாக இருக்கும் ஒருகூட்டத்திற்குத் துணை போகும். ஆனால் ஆளுநர்க்கு எதிர்த்த முகமாக உள்ள பார்ப்பனர்களும், ஆளுநரை ஒட்டிய பார்ப்பனரால் நன்மை பெற்ற வண்ணமே இருப்பர். பிறிதொரு நிலையில் ஆட்சி மாற்றப்பட்டால், முன்னர் துணை பெற்ற முகம் இக்கால் எதிர்த்த முகமாக உள்ள கூட்டத்திற்குத் துணைபோகும். இஃது ஆரிய வரலாற்றில் சுழன்று சுழன்று வரும் உண்மை. இறைவன் எப்படி நரிகளை ஏமாற்றி வாழவே படைத்துள்ளானோ அப்படியே பார்ப்பனர்களை மாந்த நரிகளாகவே படைத்துள்ளான். திருந்திவரும் பார்ப்பனர் பலர் உளர். அவரால் நமக்கு என்றும் கேடில்லை. திருந்தாத பார்ப்பனரைப் பற்றியே நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இறுதியாக, புதிய அரசமைத்த எம் அன்னைத்தமிழின் செல்வக் குழந்தைகளுக்கு எம் நெஞ்சகன்ற வாழ்த்துகள். தமிழர் நலம், தமிழ் நலம் இவற்றில் கருத்துக் கொண்டு, இவ்விந்திய நாட்டு அரசியல் அமைப்புக்கே ஒரு புதுவழியை அவர்கள் காட்டுவார்களானால் அதுவே நம் தமிழ் அன்னைக்கும் இவ்வுலகத்திற்கும் நாம் செய்யும் தலையாய தொண்டாகும். அத் தொண்டுக்கு நடையிடுங்கால், அவர்களுக்குத் துணையாகத் 'தென்மொழி' பல கருத்துகளை முன்வைக்கும். அதற்கு முன்னம் அவர்களை நாம் கேட்டுக் கொள்பவை இவை: ஆரவாரப் பேச்சுகளாலும் போலிச் செய்கைகளாலும் பெறுகின்ற புகழும்

செல்வமும் நிலையானவை அல்ல. அவை காய்ந்து உதிர்ந்து விழுகின்ற இலைச்சருகுகளுக்குச் சமம். உங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைத் தூக்கி எறியுங்கள். பொது நலத்திற்கு ஊறு விளைப்பவர் உங்கள் உடன் பிறந்தவரே என்றாலும், அவரைப் புறந்தள்ளிவிட்டு மேலே போங்கள். தமிழர் அறத்தை மனத்தில் இறுத்தி, தமிழர் பண்பாட்டைச் செயலில் நிறுத்தி, தமிழரசு நடத்திக் காட்டுங்கள். போலிப்புகழுக்கும், பெருமைக்கும் தலை வணங்காதீர்கள். அறம்போகும் போக்கில் உங்கள் உளம் போகட்டும்; அதனவழி உங்கள் அறிவு செயல்படட்டும். முன்னிருந்த அரசினர்க்கு நாமெடுத்து முழங்கிய உரைகளையெல்லாம் நூறு முறை திரும்பிப் பார்த்துக் கொள்ளுங்கள். அது செய்யத் தவறியதைச் செய்யுங்கள். செய்து சிறந்தவற்றைத் தொடருங்கள். எவ்வகையான குறுக்குப் போக்கையும் எவர் சொன்னாலும் செவி கொளாதீர்கள். உங்களைச் சுற்றியிருக்கும் பாராட்டுக் கூட்டத்தின் புகழுரைகளை விட, உங்களுக்கு எட்டியிருக்கும் நல்லவர்தம் மெல்லுரைகளை நுணித்துக் கேளுங்கள். தமிழன்னை உங்கட்குத் துணை நிற்பாளாக!

—பெருஞ்சித்திரன்.

ஓர் எச்சரிக்கை.

—பாரதிதாசன்—

அமைச்சரென நம்மவர்க்குப் பெயர் அமைத்தே
அவர்கையால் தமிழ்க் குலத்தைக் கெடுப்பதன்றி
இமைப்போதும் அவர்விருப்பம் போல் நடக்க
எள்ளளவும் இடந்தாரார்; இதை எண்ணமல்
நமக்குரிய செந்தமிழர் சில்லோர், இன்று
நம்கொள்கைக் கெதிராக நடக்கின் றார்கள்!
தமக்குரியார் **அவர்** அல்லர் என்னும் உண்மை
தாமறிவார் இன்றில்லா விடினும் நாளை!

அவர் நினைவாக:

தெற்குச் சூறைக்கு வடசுவர் நிற்காது.

பாவேந்தர்-பாரதிதாசன்

தமிழை ஒழிப்பவன் உலகினில் இல்லை
தமிழை எதிர்த்தவன் வாழ்ந்ததும் இல்லை (தமிழை)

தமிழை ஒழிக்க இந்தியை நுழைப்பவர்
தம்வர லாற்றுக்கு மாசி ழைப்பவர் (தமிழை)

இன்பத் தமிழ்மொழி உலக முதன்மொழி!
இந்தி மொழியோ ஒழுங்கிலா இழிமொழி!
என்ன போயினும் தமிழர்க்குத் தமிழ்மொழி
இன்னுயிர் ஆகும் வாழ்க தமிழ்மொழி (தமிழை)

ஒருமொழி ஓரினம் கொண்டதோர் நாடு
பிறன் அதில் அடிவைக்க நினைப்பதும் கேடு (தமிழை)
பெருமொழி அழித்தும் பேரினம் அழித்தும்
பெறுவது நாடன்று தன்பிண மேடு (தமிழை)

தீதுற ஆள்வதோர் ஆட்சியே அன்று;
செந்தமிழ் நாட்டிலே இந்தி யா நன்று?
மோதுறும் பதவி நிலையிலா ஒன்று;
முழங்காற்றங் கரைமரம் நிலைக்குமா நின்று? (தமிழை)

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்தென்பர் சான்றவர்
தீக்கனவு காண்கின்றார் இந்திபற் றியவர்
தெற்குச் சூறைக்கு நிற்காது வடசுவர்! (தமிழை)

தொடர் 4.

ம. இலெ. தங்கப்பா.

இலக்கியம்

இயற்கையாற்றுப் படை

கொட்காழ் அன்ன புள்ளிச் சிறுகண்
கிளியுகிர்க் கணுக்கால் திரள்ஓட் டெருந்து
மணல்திரி சுவடு நார்க்கயி றேய்க்கும்.
வேலிப் பரீஇ வித்தெனுங் கண்ணின்
கோலப் பல்வரிக் கொடுங்கால் அலவன்
எறிதிரை யூர்ந்தே எக்கர் ஏறித்
துறுகல் நீழல் ஏமம் பாய்தரும்.
குழைவறு மலர்ச்செவிக் கொடுங்குழல் பெருந்தோள்
மழைவிழி நுளைச்சியர் கவுள்படு கையொடும்
அடுக்கிதழ்த் தாமரை அணிபுனை யாப்பின்

முடைப்புலால் நாறு மடற்பனங் கூடையொடு
தொலைகடல் நாப்பண் புள்ளியின் தோன்றி
அலைபொரு திமிலின் மீனொடு வரூஉந்தம்
வலைஞர்ப் பார்க்கும் வண்மணல் இருக்கைக்
கடற்கால் தோய்தலின் உட்பால் வெளிறிய
உவர்க்கால் காக்கை மீனூண் நசைஇக்
குறுந்தாழ் வட்டத் தலைவரல் பார்க்கும்.
நீள்கழிக் கானல் நேர்குவம் எனினே,
வாள்வாய்க் கருக்கின் கொழுமடல் தாழை
ஐதுவீழ் உதிர்பொடி கெழுவீ கமழும்.
கைபுரை பாசிலைக் கவர்சினை முந்திரி
கிளிவாய்ப் பருப்பின் சிமிழ்க்கனி தூக்கும்.
பொற்கரு சிதறிய சிறுவெண் முட்டையின்
பொடிஉதிர் பல்லிணர் முருகவிழ் நறும்பூ
செம்மல் விரிந்த தண்கமழ் படுக்கை
முசிறு மொய்த் தன்ன செயிர்தீர் காட்சிக்
கிளித்தலைப் பசுங்காய் வரியிலைக் கெழுநிழல்
வண்டிமிர் புன்னை புள்ளார்ந் திசைக்கும்.
ஊசிப் பாசிலை முட்காய் வஞ்சி
வீசுவளி அசைதலின் ஒவென ஒலிக்கும்.
ஒளிவெண் கூழ்மணல் எக்கர் தோறும்
பிளவிலை அடும்பின் நெடுங்கொடி மலரும்.
நறுங்கவின் ஆம்பலும் கொட்டியும் நிறையக்
குறுங்கழி நெய்தல் ஒண்ணகை பூக்கும்.
கோரை உடுத்த குண்டுநீர்ப் பொய்கை
நீலம் நுகர்ந்து வரிச்சுரும் பிமிர்தரும்
எழுதுமேடையின் தாட்பளு அழுத்தும்
பூவமை பளிங்கிற் சிறுகண் பூவுதிர்
தாதினு நுண்ணிய துகள்தோய் மென்சிறைச்
சுருட்கை இரட்டிய பல்கேழ் பூச்சி
இனவண் டிகலத் தாதுண் சோலை
அணியுடுப் பூத்த வானம் ஏய்க்கும்.
புலர்மடல் தாழை உலர்அரை முரித்த
உட்குடை குழிவில் தேங்கிய மழைநீர்
மட்கலஞ் சுதையின் மண்ணுறுத் திரும்புகர்

இட்டுவைத் தன்ன மீன்பகை அருந்தும்.
இருந்திரை ஓயா நடுக்கியல் இயக்கத்துக்
கருந்தலை வெள்வரிக் கவர்சிறை உள்ளான்
புன்மலி திட்டையிற் புழுக்கவர்ந் துண்ணும்
நளிகுழல் மறைக்கும் விளிம்பகல் கவிப்பின்
புறந்தோள் மறையாப் புதுவரன் மரபின்
மார்பொடு வரைந்த நெட்டுடை புனைந்து
மேலை மகளிர் திரிதரல் மான
முன்னீள் அலகின் பின்னீள் கொண்டைக்
குவியிள மென்தோள் வெள்வரிக் கருஞ்சிறை
ஒளிர்மரங் கொத்தி இனனொடுசேர்ந் திரியும்.
வனப்புறு கானல் வழி எழில் மடுத்துப்
பனிப்புறு நெஞ்சின் தண்டா உவப்பொடு
பரதவர் பாக்கம் படர்குவம் எனினே,
மீன்செதில் விளங்கும் புலவுடை முன்றில்
நீள்வலை யுணங்க, நெடும்பாய் துஞ்சும்.
புன்மயிர் யாக்கைப் புலர்தலைக் கூர்ங்கண்
கைவல் சிறுஅர் தெங்கிற் கழித்த
பாளை வன்மடல் சிறுபட கியாத்தே,
அறுவைக் கிழியின் சிறுபாய் நாற்றிக்
குழிநீர் ஓட்டுங் கம்பலை மிகுமே!
சிறுநுண் மணலின் செழுமை வெருது
வரைவண் நெடுங்கழை வகிர்கழி நிரீஇப்
பனிப்புறு தெங்கின் கீற்றிட் டடைத்த
பகர வேலிப் பயில்மணல் நடுவண்
போந்தை வேய்ந்த குறுங்கால் மட்சுவர்
ஈர்ந்தண் ணீழல் எழிற்சிறு குரம்பை
ஆர்ந்த காட்சியின் உயிர்துளிர்ப் புறுமே.
நுண்ணிடைப் பெருந்தோள் நுளம்ப மகளிர்
முன்றில் அடுப்பிற் சிறுதீ மாட்டி
வறைமீன் வறுத்த வண்புகை பரந்து
குறுவண் தெங்கின் குலையிடைக் கிடந்து
பெருவண் டழிப்போன் கண்ணிடைக் கமழும்
அலவன் உறிஞ்சியும் வறைமீன் கடித்தும்
இறவுச் சூட்டை இடையிடைத் தின்றும்

கஞ்சி யுண்ணுங் கருந்தோட் காளை
வஞ்சி மருங்குற்றன் மடந்தை தனக்குக்
கடல்மேற் சென்றதுங் கடுஞ்சுற வெதிர்ந்ததும்
அடலுற வென்றதும் அறைந்த நீள்கதை
முலையுண் குழவி முகிழ்முகம் தூக்கிக்
குலையா விருப்பிற் செவிகேட் கும்மே!
தெங்கின் குரும்பை நாணல் தைஇக்
கழைமென் பிளவின் உருளை குயிற்றிச்
சிறுவர் ஈர்க்கும் பூப்புனை சிறுதேர்
வரிநிழல் தெருவில் மணல்வீ டியற்றிச்
சிறுமியர் யாத்த பாவை வீழ்ப்பக்
கணங்கொள் சிறுவர் கலிபே ரார்ப்பும்
சினங்கொள் சிறுமியர் முனிந்த பூசலும்,
புன்னை நீழல் பொலிமண லிருந்து
துன்னல் ஊசியின் தொல்வலை பற்றிப்
பின்னுப் பொத்தும் முதியோர் செவிதெறும்.
தெங்கமர் சோலைச் சிறுகருங் காக்கை
இனங்கரைந் தன்ன இளையோர் ஆர்ப்பப்
பைங்காய் சீவிப் பங்கிடும் ஒருமகன்
விருந்து காண்டலின் வருகென மலர்ந்தே
அருந்தக் கொடுக்கும் அவ்விள நீரின்
பெருஞ்சுவை உளதோ நகர்தரு வாழ்வே?
பழந்தமிழ் மக்கள் பாங்குற நடாத்திய
செழுந்தண் வாழ்விற் சீறள வேனும்
இன்றுள தாயின் இவண ததுவே!
குன்றுப் பரதவர் குலமே வாழ்க
என்றவர்ப் பழிச்சி யாமவண் பெயர்குவம்!
இன்னணம் ஊழ்த்த இயற்கைத் துய்ப்பின்
மன்னுயிர் அன்பு விரிதல் காண்குவம்.
பறவையும் விலங்கும் பயில்புன் வாழ்வின்
உறவென் றோர்குவம் உள்ளுணர் வாழ்குவம்.
பொழிலும் மலையும் பொய்கையும் பொதுளிய
எழிலார் அமைதியில் அவலங் களைகுவம்!
சென்மருங் கார்ந்து சிறூர்சூழ் கேண்மை
நல்விருந் தாட்டு நயத்தலுங் காண்குவம்

கற்று நகருறை கடுமகர் போலார்
சிற்றூர் வாழ்குநர் செயிர்தீர் அன்பின்
நலங்கண் டுசாவலும் நலிவின் இரங்கலும்
அழையா உதவியின் ஆர்தலும் அறிகுவம்
அறியா மையின் அடர்வன் பூசல்
வெறிகொள் சூழ்ச்சியின் விளைவன எனினும்
பொறியறு நகரின் பொய்ம்மலி இழுக்கின்
கரிசுபடு கயமை காணின் சிறிதே!
தன்மை காணின் ஊர்வே றுமே!
முன்னிய நிரப்பின் ஊர்சில இழியினும்
இயற்கை தப்பிய கடுமைத் ததுவே!
வண்மையிற் சீறூர் வாழ்க்கை உயரும்
புண்ணுறு நகரோ பொருளாற் கெடுமே!
பசையறு சில்லூர்ப் பண்பழி வாயின்
நகர்மலி தொடர்பின் நலிவே யன்றே!
இயற்கை வாழ்க்கைக் குலகம் எழினே,
வறங்கூர் நெஞ்சின் வளங்கூர்ந் துயர
மறங்கூர் கொள்கை அறங்கூர்ந் தழிமே!
பொய்மை வாழ்விற் புல்லென் யாக்கை
நொய்மை மாறித் திண்மை சேர்மே!
பொன்பொருள் வேட்டம் பொய்யாக் கழன்று
மன்னுயிர்த் தொண்டின் மனநிலை பெறுமே!
உறுநுண் ணோக்கும், உள்ளுணர்வாட்சியும்
கடும்பல் இடர்நகக் கவலறு திறனும்
கண்ணுறு மிடத்தின் கவின்சுவை உணர்ந்து
நுண்ணிதின் மகிழ்வும் நுவல்கலை ஆற்றலும்,
உண்ணிறை விடுதலை ஓங்குமெய் யறிவும்,
செப்பமும் ஒழுங்கும் செம்பொருள் உணர்வும்,
தப்பா தடையத் தழைக்குமெய் வாழ்வே!
திறந்த நெஞ்சொடும் கண்ணொடும்
புறந்தரல் இயற்கை ஆற்றிடைப் படினே!

முற்றும்.

த. சலாவுத்தீன், அறி. இ; ஆ. ப. (Bsc.BT)

பறவையினம் :-

ஆந்தை

அன்ருட வாழ்வில் நாம் பலவகையான புள்ளினங்களைக் காண்கின்ருேம். அவற்றில் சிலவற்றைக்கண்டு களிப்பெய்துகின்ருேம். அவ்வாறு களிப்புற்றுப் பாவலர்கள் பலர் பல பாடல்களில் அப்பறவைகளை வண்ணித்திருப்பதை நாம் இலக்கியங்களில் காண்கின்ருேம். மேலும் சிலவற்றின் பெயர்களைக் கேட்டதும் அஞ்சி நடுங்குகின்ருேம். அவற்றின் குரலைக்கேட்டு 'குறி' கணிக்கின்ருேம். இவ்வகையைச் சேர்ந்த பல பறவைகளில் ஆந்தையும் ஒன்ருகும்.

ஆந்தையின் கூவலால் நன்மை தீமை அறிதல் என்ற தலைப்பின்கீழ்க் கலைக்களஞ்சியம்தரும் சில வரிகளைக் கீழே தருகின்றேன். ''கூவல் ஒன்ருனல் சாவு; இரண்டானல் கருமம் கைகூடுதல்; மூன்ருனல் மனைவி வருதல்; நான்கானல் கலகம்; ஐந்தாகில் பயணம்; ஆருகில் அடுத்தவர் வரவு; ஏழாகில் இழந்த பண்டம் கிட்டுதல்; எட்டாகில் சாவு; ஒன்பதும் பத்துமாகில் நன்மை உண்டாகுமென்பர்'' இதனைக் கண்டறிந்து மாந்தரை ஏமாற்றிய புல்லன் எவனே? அறிவியல் வளர்ந்துள்ள இந்நாளில் மேற்கண்டவற்றை நம்பும் சின்மதியாளரும் உளர்! உண்மையாக இவற்றை நாம் நம்பலாமா? நமக்கு அறிவில்லையா? நம் பகுத்தறிவும் எண்ணங்களும் எங்கே போய்விட்டன? மேற்கண்ட குறிகளைக் கணித்த அறிவிலியின் விளக்கத்தை விட்டு அப்பறவையின் வாழ்க்கை வரலாற்றையும் அதனல் மாந்தர்க்கு ஏற்படும் நற்பயன்களையும் நாம் ஈண்டுப் பார்ப்போம்.

ஆந்தைகள் உலகம் முழுவதிலும் பரந்து வாழ்கின்றன. ஆந்தையினத்தில் ஏறத்தாழ முன்னூறு இனங்கள் இருக்கின்றன. ஆறு விரற்கடையிலிருந்து இரண்டு அடி நீளம்வரை உள்ள ஆந்தைகள் இருக்கின்றன இவை "மின்சிறகிகள்"(Strigiforme)என்ற வகையைச் சேர்ந்தவை.

உடலமைப்பு:- அகலமான உருண்மைமுக அமைப்பு; பரந்த கண் மணிகள்! இருளைக்கிழித்து நெடுந்தூரம் பார்க்கும் திறன் படைத்த கண்களை உடையது ஆந்தை. இஃது ஓசைசெய்யாமல் பறக்கும். கூரிய பெருநகங்கள் வாய்ந்த இருகப்பற்றும் கால்கள் உடையது. இவை தங்கள் கண்மணியை அசைக்க முடியாது ஆகையால் தம் தலையைச் சுழற்றித்தான் எல்லாப் பொருள்களையும பார்க்கவேண்டும். தலையைச் சுற்றிப் பின்பக்கம பார்க்கும் ஆற்றல் ஆந்தைகளுக்கு உண்டு. ஆந்தை கண்ணை மூடும்போது மேற்புருவம் கீழ்நோக்கிவரும். ஆனால் மற்ற பறவைகளுக்கோ கீழ்ப்புருவம் மேல்நோக்கிச் செல்லும். ஆந்தை மிகச்சிறிய ஒளிக்கீற்றையும் அறிந்துகொள்ளும் ஆற்றல் படைத்தது. ஆந்தையால் அதிகாலையிலும் கதிரவன் இருக்கும் நேரத்திலும் பொருள்களை நன்றாகப்பார்க்க முடியும். சில ஆந்தைகள் காலை நேரங் களில் உணவு வேட்டையாடுவதும் உண்டு. இவற்றிற்குக் காதுகள் பெரியனவாக இருக்கும். இப்பறவைக்கு மட்டும் காதுகள் வெளிப்புறம் நீட்டிக் கொண்டிருக்கும்.

உணவு உண்ணும் முறை:- ஆந்தை புலால் உண்ணும் வகையைச் சேர்ந்தவை. இவை சிறியபாலுட்டிகள், பறவைகள், முதுகெலும்புள்ள சிறு உயிரிகள், புழுக்கள், நத்தைகள், வயலெலிகள், வீட்டெலிகள். நண்டுகள், தவளைகள், மீன்கள், பல்லிகள்—ஆகிய இவற்றை உணவாகக் கொள்ளும் பொதுவாக இவை இரவில்தான் இரையைப் பிடிக்கும். இரவில் ஒலியின் உதவியால் தன் உணவைத் தேடிக்கொள்ளும் ஆற்றல் இவற்றுக்கு உண்டு. இவற்றின் இறக்கைகள் மிகவும் மென்மையாக இருப்பதால் பறக்கும்போது ஒலி உண்டாவதில்லை முதலில் இது தன் இரையைத் தன் கூரிய நகங்களால் இருகப் பற்றிக்கொண்டு உணவைக் கிழித்துப் பெரிய துண்டுகளாக அப்படியே விழுங்கிவிடும். செரிமானமாகாத எலும்பு, இறக்கைகள் மற்ற பொருட்கள் முதலியவற்றை உருண்டைகளாக்கி (Small pellets) வாயின் வழியாக வெளியேற்றிவிடும். இவ்வாறு வெளியேற்றப்

பட்ட எழுநூறு (700) உருண்டைகளை ஆராய்ச்சி செய்து பார்த்ததில் அவற்றில் 269வீட்டு எலிகளின் எலும்புகள், 93வயல்எலி எலும்புகள், 1590 "சிரு,, (Shrews) எலி எலும்புகள், 16 வௌவால்களின் எலும்புகள் 49 மரங்கொத்தியின் எலும்புகள், 3 எலிகளின் எலும்புகள் இருந்ததைக் கண்டறிந்தார்கள். இதிலிருந்து ஆந்தைகள் உண்ணும் உணவு வகைகள் நமக்குத் தெள்ளெனத் தெரிகின்றன.

இனப் பெருக்க முறைகள்:- ஆந்தைகளில் சில தங்கள் கூடுகளைத் தாங்களே கட்டிக்கொள்ளும். ஆனால் சில பறவைகள், பிறவற்றின் கூடுகளில் வாழத்தொடங்கி விடும். அங்கேயே முட்டைகளை இட்டு விடும். முதல் முட்டை இட்டவுடன் அஃது அடைகாக்கத் தொடங்கும். சில ஆந்தைகளுக்கு உணவு மிகுதியாகக் கிடைத்தால் முட்டைகள் அதிகமாக இடும். ஆணும் பெண்ணும் பக்கத்தே உட்கார்ந்து அடை காக்கும். முதல் முட்டை இட்ட உடன் அடைகாக்கத் தொடங்குவதால் குஞ்சுகள் பொரிக்கப்படும்பொழுது ஒரே கூட்டில் பல பருவ மாற்றங்கள் கொண்ட குஞ்சுகள் இருப்பதைக்காணலாம்.

ஆந்தைகளில் பலவகை:- ஆந்தைகளில் பலவகை உண்டு. அவற்றின் முக அமைப்பைக் கொண்டு அவற்றிற்குப் பெயரிட்டு இருக்கின்றனர்.

1. சிறுவகை ஆந்தை:- (Spotted Owlet) இவை சிறியவாக இருக்கும். இவற்றின் உணவு சிறிய பறவைகள் புழுக்கள் முதலியன.

2. கோட்டான்:- (Barn Owl) இது பெரியதாக இருக்கும். இது பெரிய பறவைகள், உயிரிகள் முதலியவற்றை உணவாகக் கொள்ளும்.

3. பெருங்கூகை:- (Great Horned Owl) இதற்கு முகம் அகலமாய் இருக்கும். காதுகள் இருக்கும் பாகத்தின் வெளிப்புறத்தில் கொம்புகள் போல் சிறகுகள் ஒன்றுகூடி இருக்கும்.

4. ஊமன்:- (Brownfish Owl) இது பழுப்பு நிறமானது நீர் நிலைகளின் மேல் பறந்து வந்து சிறு மீன்களைப் பிடித்து உணவாகக் கொள்ளும்.

5. குரங்கு முகக் கூகை:-(Monkey Owl) இதன் முக அமைப்பு குரங்கைப் போலவே இருக்கும். கால்கள் நீளமாகவும் உயர்ந்த தோள்

(51-ஆம் பக்கம் பார்க்க)

நூற்சுருக்கம்

உலகின் முதற் செம்மொழி

(The primary classical language of the world)

மொழிநூற் பேரறிஞர் பண்டித. புலவ. கலைத்தலைவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எழுதியது.

விட்டுணுவைக் குறிக்கும் தமிழ்ப் பெயர்கள் எல்லாம் ''கரு நிறமுடையவன்'' என்ற பொருளையே கொண்டனவாயிருக்கின்றன. வேதகாலச் சொல்லான 'சிவ' என்பது 'மங்கலமான' என்ற பொருளையே தருவது. உருத்திரன், அக்கினி, இந்திரன் ஆகியோர்க்கு அடையாக வருவது. தமிழிலோ, 'சிவ' என்பது 'சிவந்த நிறமுடையோன்' என்று பொருள்படும். இரண்டும் வேறு வேறாகும்.

வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே முழு முதற்பொருள் சிவன் என்றும் திருமால் என்றும் தமிழருள் இருவேறு பிரிவினரால் இருவகையாக வழிபடப்பட்டு வந்துள்ளது. சைவமும், வைணவமும், கிறித்தவமும், இசுலாமும் தமக்குள் எவ்வளவு வேறுபட்டுள்ளனவோ அந்த அளவு வேறுபட்டவை.

'பிரமன்' என்றொரு கடவுளை ஆரியர்கள் உண்டாக்கிக் கொண்ட பொழுதிலும் 'பிரமன்' வழிபாட்டை அவர்கள் நிலைநாட்ட முடியாமற் போனது உற்று நோக்கத் தக்கது. இன்றைய இந்து சமயத்தில் "மும் மூர்த்தி" வழிபாடு இல்லை. இன்று சமய அறிவு வாய்ந்த தமிழர் தங்களைச் சைவர் அல்லது வைணவர் என்று குறித்துக்கொள்ள விரும்புகின்றனரே யல்லாமல் 'இந்து' என்றழைத்துக்கொள்ள விரும்புவதில்லை.

ஆரியர் வருகைக்கு முன், தமிழர் தங்கள் மன, அறிவு வளர்ச்சி நிலைக்கேற்பவும், சமய வழிபாட்டு முறைக்கேற்பவும் மூவகையினரா யிருந்தனர். தாழ்நிலையிலுள்ளோர் பலகடவுள்களை வழிபட்டனர்: நடுத்தர வகுப்பினர் ஒரே இறைவனை வழிபட்டனர் ஆயினும் உருவ வழிபாட்டை மேற்கொண்டிருந்தனர். உயர்ந்தவரோ, பெரும்பாலும் ஆன்றோரும் துறவியருமாயிருந்தனர். உருவமற்ற முழுமுதற் பொருளை வழிபட்டனர். உருவமற்ற இறை வழிபாடு என்பது இறைவனை உருவம், பெயர் அற்றவனாகவும், அழிவின்மை, முழுமை, பேரருளுடைமை, அனைத்தறிவுடைமை, அனைத்தாற்றலுடைமை, அனைத்திலும் நீக்கமற நிலவல் ஆகிய தன்மைகளை உடையவனாகவும் கொண்டு, உளத்தாலும் உணர்வாலும் வழிபடுவதாகும். இடைக் காலத்தில் தமிழகத்தில் சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம், ஆரியர் வருகைக்கு முன்னிருந்த தமிழரின் ஒரே முழுமுதல் வழிபாட்டை மீண்டும் நிலை நிறுத்த ஏற்பட்ட முயற்சியாகும். ஆரியரின் பிழைப்பை இது கெடுப்பதாக இருந்ததால் அவர்கள் இவ்வெழுச்சியை விரும்பினரல்லர்.

குலப்பிரிவின் தோற்றம்:

இந்தியக் குலப்பிரிவு(சாதிமுறை) அறிவுக்குப் பொருந்தாததும், 'பிராமணர்'க்கே நலம் பயப்பதுமான, மனப்போக்கில் அமைக்கப்பட்ட ஒரு முறையாகும். மேலைநாட்டினரோ, இம்முறை உழைப்புப் பாகுபாடு காரணமாக அமைந்ததென்று தவருக எண்ணி வருகின்றனர்.

தமிழ் அகப்பொருள் இலக்கியம் தமிழ்க் குமுகாயத்தை அந்தணர் அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கு பிரிவுகளாகப் பிரித்தது. இவை தொழில் அடிப்படையில் அமைந்தவை. அனைத்துத் தொழில்களும் கற்றல், காத்தல், வாணிகம், உழவு ஆகிய நான்கு பிரிவில் அடக்கப்பட்டன. வேத ஆரியர் தமிழிலக்கியத்திலிருந்து இந் நால்

வகைப் பகுப்பு முறையைக் கடன்பெற்றுத் தங்கள் நோக்கத்துக்கேற்ப அவற்றைப் பிராமணர், சத்திரியர், வைசியர். சூத்திரர் என்று மாற்றியமைத்துக் கொண்டனர்.

இரண்டிற்கும் உள்ள வேறுபாடு:

(1) தமிழரின் முறை, தமிழிலக்கியத்தில் தலைவன் தலைவராதற்குரிய தகுதிவாய்ந்த பெருங்குடி மக்கட்கு மட்டுமே உரியதாயிருந்தது. ஆரிய முறையோ எல்லாருக்கும் உரியதாகும்.

(2) தமிழ்முறை இலக்கிய நோக்கங்கட்காக மட்டுமே ஆக்கிக் கொள்ளப்பெற்றது. ஆரிய முறையோ பொருளியல் நோக்கத்துக்காக அமைந்தது.

(3) தமிழ்முறை. அவரவர் புரிந்துவந்த தொழில் அடிப்படையில் மட்டுமே அமைந்ததாகும். தொழில் மாறினால் பெயரும் மாறும். ஆனால் ஆரிய முறை பிறப்பால் அமைந்த "சாதிப்" பாகு பாட்டில் எழுந்தது. தொழிலைப் பொறுத்து அமையாமல், சாதிப்பட்டங்கள் அவரவர் பிறப்புக்கு ஏற்றபடி அமைந்தன.

(4) ஆரியர் வருகைக்குமுன், கல்வி தமிழர் அனைவர்க்கும் பொதுவாயிருந்தது. ஆரிய முறைப்படி கல்வி 'பிராமணர்'க்கு மட்டுமே உரியதென்று கட்டுப்படுத்தப்பட்டுக் கல்வியும், உயர் அலுவல்களும் பிராமணரால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டன. பிராமணர்க்கு அரசினர் செலவில் கல்வியும், உண்டி உறையுளும் கொடையாக வழங்கப் பெற்றன,

(5) தமிழர் முறையின் முதற் பகுப்பான 'அந்தணர்' பார்ப்பார் என்றும் ஐயர் என்றும் இரண்டு உட்பிரிவாகப் பகுக்கப்பட்டனர். 'பார்ப்பார்' இல்லறவாழ்வை மேற்கொண்டு நூற்களைப் 'பார்ப்ப'வராக இருந்தனர். ஐயர் என்பவரே உண்மையில் அந்தணராவர். துறவியரும் அருளாளரும் இப்பகுப்பில் அடங்கினர். அந்தணர், அந்தண்மை (அருள்) உடையவர், என்று பொருள்பட்டு முதலில் தமிழ் அருளாளரையே குறித்தது. பின்பு தமிழகத்துக்கு வந்து கலந்தோர் வேற்று நாட்டினராயினும் உயர்வும், அருண்மையும் உடையவராயின் அவரையும் குறிக்கப் பயன்பட்டது. செய்யுளில் கதைத் தலைவராக வருவோரைக் குறிக்கையிலோ இவ்விரு உட்பிரிவுகளையும் சேர்த்தே அந்தணர் என்ற பெயர் குறித்தது. ஆயினும், ஆரியமுறைப்படி

முத்தற் பகுப்பு பிராமணரை மட்டுமே குறிக்கின்றது. தமிழகத்துக்கு வந்த பிராமணர் சிறிதுசிறிதாகத் தமிழரின் ஏமாறுந் தன்மையைப் பயன்படுத்திக்கொண்டு அந்தணர் என்ற பெயரைத் தம்மினத்துக்கு மட்டுமே உரியதாக ஆக்கிக் கொண்டனர்.

(6) தமிழருள் இரண்டாம் பிரிவு ஆட்சி செய்பவரை மட்டுமே குறித்தது. ஆரியரின் 'சத்திரியர்' என்ற சொல்லோ போர் புரியும் கூட்டத்தினரையும், மக்கள் தொகுதியையும் சேர்த்துக் குறித்தது.

(7) தமிழரின் 'வணிகர்' என்ற பிரிவு வாணிகத்தை மட்டுமே தொழிலாக உடையவரையே குறித்தது. ஆரியரின் வைசியர் என்ற பிரிவோ, உழவையும் தொழிலுடன் சேர்த்துக் கொண்டது.

(8) தமிழரின் 'வேளாளர்' என்ற பிரிவு தமிழரின் குமுகாயத்துள் உயர்ந்த பகுதியினரை உள்ளடக்கியதாகும் ஆரிய முறைப்படி, குமுகாயத்தின் மிகத் தாழ்ந்த படிநிலையிலுள்ளவரையே சூத்திரன் எனுஞ் சொல் குறித்தது,

இக் குலப்பிரிவுகள் தமிழரை மடமையிலும் இழிவிலும் ஆழ்த்தி, அவரைப் பலநூறு பிரிவுகளாகப் பிரித்துப், பல பொருளற்ற அடிப் படைகளில் அவர்களை வேறு வேறு கூறுகளாக்கி வைத்துவிட்டன. இவ் வாரிய முறையின் நெடுநாளைய அழுத்தமே தமிழினத்தை இன்று கேடுகெட்டதோர் இனமாக்கித் தமிழரின் அறிவையும் மழுங்க வைத்துவிட்டது.

தமிழ் வரலாற்றுச் சுருக்கம்:

தமிழ்மொழி இலெமூரியாக் கண்டத்தில் குறைந்த அளவு 50000 ஆண்டுகட்கு முன்பே முழுவளர்ச்சி பெற்ற மொழியாக விளங்கியது. அதற்கு முன்பே அது மொழி வளர்ச்சியின் நான்கு படிநிலைகளான அசைநிலை, புணர்நிலை, பகுசொன்னிலை, பல்பகு சொன்னிலை ஆகிய வற்றைக் கடந்திருக்க வேண்டும். அதற்கு ஏறத்தாழ ஓரிலக்கம் ஆண்டுகளாவது ஆகியிருத்தல் வேண்டும். பழந்தமிழர் நாகரிகத்தின் வளர்ச்சிப் படிநிலைகளான குறிஞ்சி வாழ்க்கை, முல்லைவாழ்க்கை, மருத வாழ்க்கை ஆகியவற்றைப் படிப்படியாகக் கடந்து வர வரத் தமிழும் வளர்ந்து செப்பம் எய்தியது. மக்கள் பலதிசைகளிலும் நெடுந் தொலைவு பரவி வாழத் தொடங்கினர்.

இலெமூரியத் தமிழிரின் முதல் பாண்டிய மன்னன், பஃறுளி யாற்றங் கரையில் 'மதுரை' என்னுந் தன் தலைநகரை அமைத்தான். அம் மதுரையே, தலைக் கழகத்தின் இருப்பிடமாக விளங்கியது. குமரிக் கண்டம் கடலுள் மூழ்கியபின் பாண்டியர் தலைநகரம் குமரியாற்றின் கழிமுகத்தில் அமைந்த அலைவாய் (?) எனும் நகருக்கு மாறிற்று. இதுவே சமற்கிருத இலக்கியத்தில் கபாடபுரம் என்றழைக்கப்பட்டது. இடைக் கழகம் இந் நகரில் அமைந்திருந்தது. இந் நகரும் கடலுட் படவே, தற்பொழுதைய மதுரை நகரம் எஞ்சிய பாண்டிநாட்டின் தலை நகராயிற்று.

வடக்கு நோக்கிப் பரவிய தமிழர் தங்கள் மொழி வடக்கில் திரா விடமாகத் திரியவே தாங்களும் திராவிடர் என்று பெயர் பெற்றனர். திராவிடருள் ஒரு பகுதியினர் சிறிது சிறிதாக வடமேற்கு நோக்கி முன்னேறி இசுகாந்திநேவியா (Scandinavia)வரை சென்று பின்பு ஆரியராக மாறிப் படிப்படியாக ஐரோப்பாவின் கிழக்கிலும் வடகிழக் கிலும் பரவினர்; அங்கிருந்து நாடோடிக் கூட்டமாகத் திரிந்து பார சீகத்தின் வழியாக இந்தியாவுக்குள்ளும் நுழைந்தனர். இவர்களே வேத ஆரியர்களாவர்.

வேத ஆரியர் இந்தியாவுக்குள் வந்த ஞான்று இலக்கியமோ, மொழி நெடுங்கணக்கோ பெற்றிருக்கவில்லை. வட இந்தியாவிலேயே வேதங்கள் உருவாக்கப்பெற்றன. அப்பொழுது வடஇந்தியாவில் பரவியிருந்த பல மக்கள் மொழிகளின் சாயலே வேதத்திற் காணப்படு கின்றது. இம் மக்கள் மொழிகளே சமற்கிருதத்தில் 'பிராகிருதம்' என்று குறிக்கப்படுகின்றன.

பேசுவோர் தொகை மிகக் குறைந்திருந்ததாலும் ஒலிப்பியல்பிலும், சொற்பகுவியல்பிலும் அடைந்த மிகைவளர்ச்சியாலும் வேதமொழி இறந்தொழிந்தது. ஆயினும் வேத ஆரியர் தங்கட்கென ஒரு தனி இலக்கியத்தை அமைத்துக் கொள்ள விரும்பினர். எனவே தமிழருடன் தொடர்பு கொண்டு, தமிழ் வரிவடிவினின்று கிரந்த எழுத்துகளை ஆக்கிக்கொண்டனர்; இறந்துபோன வேதமொழியினின்றும், பிராகிருத மொழியினின்றும் அரைச் செயற்கையான இலக்கியப் பேச்சு மொழி யான சமற்கிருதத்தை உருவாக்கிக் கொண்டனர். தமிழில் உள்ள எழுதப்பட்ட நூற்களையும், எழுதாச் செய்திகளையும் சமற்கிருதத்தில்

பெயர்த் தெழுதியும் நூல் வடிவாக்கியும் தங்கள் மொழியை வளர்த்த னர். வேதமொழிக்கும் சமற்கிருதத்துக்கும், தனியாகவும் சேர்த்தும தமிழைப்பின்பற்றி இலக்கணங்களை எழுதிக் கொண்டனர். ஆயினும் தமிழிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவையே இவையெல்லாம் என் பதை அவர்கள் தெரிவித்துக் கொள்ள விரும்பவில்லை. அனைத்தும் முதனூற்களே என்று கூறிக்கொண்டனர். தமிழரின் ஏமாறுந்தன் மையையும, தமிழ் மன்னரின் வள்ளன்மையையும் பயன்படுத்திக் கொண்டு, தங்களை நிலத் தேவர் (பூசுரர்) என்றும் தங்கள் மொழியே தேவமொழி என்றும் நம்பவைத்தனர். இவ்வாறு தமிழரை அடிப்படுத் தியபின் சமற்கிருதத்தை வழிபாட்டு மொழியாகவும் புகுத்தலாயினர். இதன் விளைவே தமிழுக்கு நேர்ந்த பேரிழிவு.

சமற்கிருதத்தின் இயல்பு:

வடமொழியை மிகையாகப் பாராட்டித் தகுதிக்கு மீறிய சிறப்பை அதற்களிப்பதும், தமிழைக் குறைத்துப் பேசி அதனைப் புறக்கணிப்ப தும் இன்று உலகமெங்கும் நிலவும் ஒரு பிழையாகவுள்ளது. காரணம். வடமொழியாளர் தமக்குள் ஒருங்கு கூடி மேலைநாட்டு அறிவாளர்முன் வடமொழியைக் கொண்டு நிறுத்தி யிருப்பதுபோல், தமிழ் மொழியின் உண்மைச் சிறப்பை அவர்முன் புலப்படுத்துவதற்குத் தமிழர் தமக்குள் ஒழுங்கான எந்த முயற்சியையும் எடுத்துக்கொள்ள வில்லை.

பெரும்பாலான மேலைநாட்டினர் சமற்கிருதம் இன்னும் வழக்கி லுள்ள மொழியே என்றுதான் நினைத்துக் கொண்டுள்ளனர்.

வேத ஆரியர் தாங்கள் முதலில் ஆக்கிக்கொண்ட (வேத)மொழி வழக்கிறந்ததும் மீண்டும் வேறு மொழியொன்றை அமைத்துக் கொள்ள விரும்பினர் என்று கூறப்பட்டது. அப்பொழுது நான்கே மொழிகள்தாம் இந்தியாவில் இருந்தன. பைசாசி, சூரசேனி, மகதி மொழிகள் வடக்கிலும் தமிழ் தெற்கிலும், மராத்தி நடுப்பகுதியிலும் பேசபட்டு வந்தன. வழக்கிழந்த வேதமொழியிலிருந்தும், மேற்கூறிய மொழிகளினின்றும் சொற்களைப் பெற்று அமைத்துக் கொண்ட (அரைச் செயற்கை இலக்கியப் பேச்சு)மொழியே சமற்கிருதம். வேத ஆரியமும் சமற்கிருதமும் ஒன்றல்ல; வேறுவேறு. தற்கால ஆங்கிலம் முந்திய ஆங்கிலோ சாக்சானியத்தினின்று எவ்வளவுக்கு வேறுபட் டுள்ளதோ அவ்வளவுக்கு சமற்கிருதம் வேதமொழியினின்று வேறு பட்டுள்ளது.

சமற்கிருதம் வழக்கிலுள்ளதா இறந்துபட்டதா என்று இன்னும் போராட்டம் இருந்து வருகிறது. உண்மை என்னவென்றால் சமற்கிருதம் இறந்துபடவுமில்லை; வழக்கிலுமில்லை. அது பிறந்ததேயில்லை. ஆதலின் இறக்கவுமில்லை. ஓர் ஆட்டுப்பாவை (Puppet)போன்றதே அதன் வாழ்க்கை. சமற்கிருதத்தை யாராவது மிகத்திறமையாகவும் தடையின்றியும் பேசிக்காட்டலாம். அதனாலேயே அது வாழும் மொழி என்று ஆகிவிடாது. வட்டரங்கில் அரிய செயல்களைச் செய்து காட்டுவது போலவே அதுவும் !

சிப்பி(இப்பி), கட்டை, வட்டம் எனுந் தமிழ்ச் சொற்கள் சுக்தி, காஸ்த, விருத்த என்னும் சமற்கிருத சொற்களிலிருந்து தோன்றியவாகக் கூறப்படுகின்றன. இது சமற்கிருத்தை முந்தியது என்று கொண்டதால் ஏற்பட்ட பிழை. உண்மையில் தமிழ்ச் சொற்களே சமற்கிருதத்தில் அவ்வாறு திரிந்துள்ளன.

அஜ்ஜ, கம்ப என்னும் பிராகிருதச் சொற்கள், ஆர்ய, ஸ்தம்ப எனும் சமற்கிருதச் சொற்களின் சிதைவே என்பர் உண்மையில் அவை அச்சன் (அத்தன்–தந்தை) கம்பம் (கோல்) என்னும் தமிழ்ச் சொற்களின் திரிபேயாம்!

(வளரும்)

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு	கொழும்பு	வெளி நாடு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7–25 உருபா	9 உருபா
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்	(இரு வண்ணம்)	100 உருபா
,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா
உள்ளே முழுப்பக்கம்		50 உருபா
,, அரைப்பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்களுக்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

மணிவேலன்

ஒருதாய் மக்கள்!

ஒருதாயின் வயிற்றினிலே மகனொருவன்
பிறந்திட்டான்; உவந்தே அன்னை
திருவிழிபோல் காத்திட்டாள்; சீராட்டி
வளர்த்திட்டாள்; தேனில் தோய்ந்த
அருந்தமிழை அன்பினிலே ஊறவைத்து,
மடியிருத்தி அழகு மார்பில்
சுரக்கின்ற பாலோடே சேர்த்தூட்டி
வளர்த்திட்டாள்; தெவிட்ட வில்லை!

ஈராண்டுக் கொன்றாக இன்பத்தின்
முத்திரையாய் இன்றும் நால்வர்
பாராண்ட தமிழினத்தின் கான்முளைகள்
போல்பெற்றாள்; பயல்கள் ஐவர்
நீருண்ட முகிலினிலே நின்றொழுகு
மழைபோல நாளும் அன்னை
மாருண்ட பாலுண்டு மண்ணுலகில்
வளர்ந்திட்டார் மகிழ்ச்சி யோடே!

சமணத்தை முதல்மகனே தழுவினனே;
ஆனாலும் தாயின் மீதில்
இமைமூடி உறங்கிடினும் அன்புமழை
பொழிந்திட்டான்! இரண்டாம் பையல்
அமைவான புத்தநெறி சேர்ந்திட்டான்;
ஆனாலும் அன்னை மீதில்
சுமைசுமையாய்க் கொண்டிருந்த அன்பினிலே
குறையவில்லை துளியும்! அம்மா!

சைவநெறி – தமிழநெறி சார்ந்திட்டான்
தகவுடனே மூன்றும் செல்வன்;
நைவில்லை நற்றாயின் மீதிருக்கும்
பேரன்பில்! நான்காம் பிள்ளை
வைணவத்தில் இணைந்திட்டான்; பெற்றெடுத்த
தாய்மீதில் வைத்த அன்பு
தைபிறக்க மலர்கின்ற மலராக
நாடோறும் தழைத்த தம்மா!

கடைப்பையன் மேனாட்டி னின்றிங்கு
கால்வைத்த கிறித்து வத்தில்
அடைபட்டான்; ஆனாலும் அன்னையின்மேல்
கட்டிவைத்த அன்புக் கோயில்
உடைபடவே இல்லையடா! அடடாவோ!
செந்தமிழா! உணர்ந்து கொள்ளா
நடைப்பிணமே! நீயுமொரு மகனென்றே
இவ்வுலகில் நடத்தல் நன்றோ?

எம்மருங்கைச் சார்ந்தாலும் ஈன்றெடுத்த
அன்னையினை எள்ளாக் கேனும்
தம்மைவிட்டுப் பிரிக்காது 'தமிழ்மக்கள்'
பாடிவைத்த தமிழ்நூ லெல்லாம்
கம்மென்று மணக்கின்ற மணத்தினை நீ
நுகர்ந்திலையோ? கல்லைப் போன்றே
உம்மென்றே இருக்கின்றாய் தமிழ்மகனே !
வாழ்தலினும் ஒழிதல் நன்றே!

எத்தொழிலைச் செய்தாலும் எச்சமயம்
சார்ந்தாலும் இனித்துப் பொங்கும்
முத்தமிழைப் போற்றாது, மூழ்கியதில்
நீந்தாது முண்ட மாகச்
செத்துவிட்ட பிணமொன்று செயற்கையுயிர்
ஊட்டியதால் தெருவில் ஆடும்
அத்தன்மை போல்நீயும் அலைகின்றாய்
மாந்தனென! அந்தோ! வெட்கம்!

அரசியலில் பங்கேற்று நன்மதிப்பை
அடைந்தவுடன் அருந்த மிழ்மேல்
பெருமதிப்புக் கொண்டவனாய் முரசறைந்து
பிறநாட்டில் பெருமை பேசித்
திருமொழியைப் பிறமொழியார் தேனென்று
சுவைக்கும்வழி செய்த லின்றி
எருமையைப்போல் தமிழ்நீரைக் கலக்கிடவே
துணிந்திட்டாய் ஏடா மூடா!

எக்கட்சிக் குட்டையிலே புரண்டாலும்
உருண்டாலும் எழுந்து நின்று
முக்கனிபோல் இனிக்கின்ற தமிழ்மொழியின்
பெருமையினை முழக்கம் செய்வாய்!
இக்கட்சி அக்கட்சி எக்கட்சிச்
சட்டையினை மாட்டி னாலும்
செக்காட்டு கரும்பினிலே வழிகின்ற
தேன்தமிழைச் சுவைக்க வேண்டும்!

உழுதொழிலைச் செய்தாலும், வணிகமது
புரிந்தாலும், உலகி லுள்ள
பழுதெல்லாம் நீக்கிடவே அறத்தொண்டு
செய்தாலும், நாட்டைத் தாங்கும்
விழுதாகி நிற்கின்ற அரசியலில்
நின்றாலும் வேறென் னத்தான்
முழுதாகச் செய்தாலும் முத்தமிழே
மூச்சாக முழங்கல் வேண்டும்!

'தமிழ்பயிற்றும் ஆசிரியன் ஒருவனே
தமிழ்காப்பான்! நாமெல் லாரும்
குமிழ்போல அழிகின்ற பிறமொழியைக்
காத்திடலாம் என்று குந்தி
உமியாக இருப்பவரும் தமிழுக்குக்
குழிதோண்டும் உலுத்தன் மாரும்
அமைத்திட்ட குழியனிலே விழுந்தொழிந்தே
அழிவார்கள்! தமிழ்மேற் சூளே!

O

ஆங்கில மொழியாக்கம்

THE RED LOTUS

Like dazzling pearls lying on an attractive green plate placed on a glass floor, drops of water gleamed on the lotus leaves in the pond. I gazed at them for a while and when I returned home there was joy in my heart.

A few days later I was there again on the bank of the pond and behold! The drops of water on the leaves now resembled spilt milk. The tiny lotus buds stood out like the heads of black snakes. Great was my joy at the sight.

Behold the rosy little buds amidst the green leaves! They are like beautiful flames of lamps carried in the tender palms of women, lighting a house of darkness. My fatigue is gone and mine eyes enjoy a grand feast.

Behold the red buds unfolding among the green leaves! The whole sight is like young damsels in green shawls laughing, their rosy lips scattering laughter ruby-like, while they look at the sky lying on their backs.

The far reaching surface of the water is like the sky. On it a jungle of green leaves, and on it pearls of dazzling white abound! And above their all the lotus flowers in profusion–pouring joy in every heart. And the heart it brings into the eye and Poetry's presence is felt.

How many lotus flowers there are! Some of them are like rosy lips; some like pure, delicate hands in a welcomming posture. Some attracting like bathing faces emerging out of water. O, what a profusin of flowers, like thousand women sporting in the pond!

The petals soft are like cheeks of children and like their eyes. And there are petals like the lips of a woman jubilant-eyeing with pleasure the figure of her husband. Another petal is dark like the heart of the wicked and another like a palm freckled with ceaseless giving.

Behold the flowers unfolding again and again! They are like poets who have opened out their mouths and hearts in song-giving away their rich store of Tamil sentiments and yet never tiring! The bees come there and suck nectar.

Behold the swarming bees! Some of them sing with joy to drink the nectar. Some of them drink to the full, fly away to a different place. And making merry high up in sky is a separate group! Behold a bee lying on the soft bed of petals, and falling asleep caring for nothing else. Digging at and throwing away the pollen is another bee.

I lost myself in joy! I lived in a world of pleasure. What a dance of beauty, where the golden pollen, the gentle breeze, the fresh fragrance the song of the bees and the host of flowers like hundreds of rubies never satiate the eye!

பெயர்ப்பு: ம. இலெ. தங்கப்பா.

மக்களவை

தமிழ் நலம் காக்கப்படுமா ?

(தென்மொழியின் 4-ஆம் சுவடி 10-ஆம் ஓலையில் மக்களவைப் பகுதியில் 'ஒருதமிழர்' எழுதியுள்ள மடலுக்கு விடையாகப் பல மடல்கள் தென்மொழிக்கு வந்துள்ளன. அனைத்தும் பல கோணங்களில் நின்று விடையிறுப்பன. அவற்றில் இன்றியமையாக் கட்டுரைகள் சிலவற்றைத் தொடர்ந்து வெளியிட்ட பின், தென்மொழியின் விளக்கக் கட்டுரை ஒன்று இக் கட்டுரைத் தொடருக்கு முடிவாக வெளிவரும். தமிழ் மொழி, தமிழ் நாடு, தமிழர்நலங் காக்கப் பாடுபடும் அன்பர்கள் அனைவரும் இக்கட்டுரை வரிசையைத் தவறாமல் படித்தறிந்து பயன் பெறுவார்களாக. —ஆசிரியர்.)

விடுத்தவர் பெருங்கடுங்கோ—தமிழ்க்குடில்

சென்ற தென்மொழிச் சுவடி 10–இல் மக்களவைப் பகுதியில் 'தமிழ்நலம் காக்கப்படுமா?' என்னும் தலைப்பில் 'ஒரு தமிழர்' மடல் விடுத்துள்ளமை படித்தேன். அவருடைய படிநிலை நல்லுணர்வுகளைப் படித்து மகிழ்ந்தேன். தென்மொழியின் மொழிக் கொள்கை, தனித்தமிழ் நாடு இவைபற்றி அவருடைய மயக்கநிலையை அறிந்து வருந்தினேன். சில நாட்களுக்கு முன்தான் தென்மொழி (முதன் முதலாகப்) படித்தார் என அறிந்து இரங்கினேன்.

தென்மொழியின் போக்கில் தமிழர்க்கு நலம் பயவாதத் தவறுகள் என்று அவ்வன்பர் அறியாமையால் சுட்டிக் காட்டியுள்ளவை விளக்கம் தரவேண்டிய அளவுக்குச் சிக்கலானவையும் அல்ல; மிக்க ஆழமானவையும் அல்ல; மொழி, நாடு என்னும் இவைப்பற்றிக் கூரியதும் சீரியதுமான கேள்வி விடுத்து, மேம்பேக்கான வினா எழுந்துள்ளதால் அதற்கு மிக்க சுருங்கிய அளவில் அன்பரின் மடல் வழியே விடையிறுத்து அமைகிறேன்.

I, மொழிக்கொள்கை.

'ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக ஏற்கின்றீர், ஏன்?' என்று கேட்கும் அன்பர் உடன் இந்தியையும் படிக்க வேண்டுமென்று உணர்த்துவதால், ஆங்கிலத்திற்கோ இந்திக்கோ எந்த இடம் அளிக்க வேண்டும் என்று அவர் கூறவில்லை. எஃது எப்படியிருப்பினும் இயற்கை முறைப்படியும் உளவியல் அறிவின்படியும் கல்வியைத் தாய்மொழியின் மூலமே கற்பித்தல் வேண்டும். ஆகையால் முதலிடம் தாய்மொழிக்கும் இரண்டாம் இடம் ஆங்கிலத்திற்கும் அளிக்கப்படுகிறது. ஆங்கிலத்தின் இன்றியமையாமையை அன்பரே விளங்க எழுதியுள்ளதால் ஆங்கிலத்திற்கு ஏன் இரண்டாம் இடம் தரப்படுகிறது என்று விளக்கம் எழுதத் தேவையில்லை.

இந்தியாவின் நாட்டு மொழி இந்தி என்று யாரால் கொணரப்பெற்றது? எப்பொழுது கொண்டு வந்தனர்? இந்தியாவின் விடுதலைக்கு முன்பா? பின்பா? ஏன் கொண்டு வந்தனர்? எதற்காகக் கொண்டு வந்தனர்? தான் தோன்றித் தனமாக வடவரில் ஒரு சிலருக்கு இந்தியை நாட்டு மொழியாக்கும் அதிகாரம் எப்படி வந்தது? யார் கொடுத்தது?

இந்தியை நாட்டு மொழியாக்க வேண்டுமென்று, (மொழியறிவில்லா)காந்தியடிகள் கூறியிருக்கிறார் என்று கதைக்கும் ஆட்சி வெறியர், காந்தியடிகளின் கூற்றுப்படி பேராயக் கட்சியைக் கலைத்துவிடவில்லை; இதனால் வயிறு வளர்க்கும் இன்னார் விரகும் அது நிலைத்தற்கு அவர் கூறும் சப்பைக் கட்டுகளும் தெளிவாகின்றன அல்லவா?

கடைக் காலற்றுக் காலிற்றச் சுவருக்கு மேற்பூச்சு பூசுவதைப் போல, நாட்டு ஒற்றுமை என்னும் பெயரால் இந்தியைத் திணிப்பது, இயற்கை உயிர்நிலைகளை அழிக்கும் கொடுமையான இழிசெயலாகும்; நம் உரிமைகளைப் பறிக்கச் செய்யும் விரகாண்மையே ஆகும். நாட்டில் பெரும்பான்மையோர் பேசும்மொழி (அவர்களுடைய கணக்குப்படியே வைத்துக் கொண்டாலும்) என்று இந்தியைத் திணிப்பது சிறுபான்மையோரை ஒடுக்கும் வன்முறையே ஆகும்.

> "உடங்(கு)அமிழ்தம் கொண்டான் ஒருவன், பலரும்
> விடம்கண்டு, நன்றிதுவே; என்றால், – மடங்கொண்டு
> 'பல்லவர் கண்டது நன்று; என்று அமிழ்(து)ஒழிய
> நல்லவனும் உண்ணுமோ நஞ்சு?"
>
> – அறநெறிச்சாரம்

பெரிய மீன் சிறிய மீனை விழுங்குவதைப்போல இந்தி ஏனைய மொழிகளை விழுங்குவது எப்படி அறமாகும்? இதற்கு உடன்படும் அரசு எவ்வாறு மக்கள் உரிமையைக் காத்ததாகும்? நாட்டுமொழியாக இந்திக்குத் தகுதியுண்டா என்னும் கேள்வி ஒருபுறம் இருக்க, ஒரு கூட்டு அரசில் சிறுபான்மையருக்கு மாறுபட்ட ஒரு முடிவு எப்படி எல்லாருக்கும் நன்மைதர இயலும்? அந்த முடிவு எந்த வகையில் நாட்டை ஒற்றுமையாக்கும் என்று கனவு காண்கின்றனர்?

'வெள்ளையனே வெளியேறு' என்று நாடு கிளர்ந்தெழுந்தபோது இந்தியைப் படித்தா மக்கள் உணர்வு பெற்றனர்?......இந்தியின் பயனாலா மக்கள் ஒன்றுபட்டு விடுதலை பெற்றனர்?... வெள்ளையனை வெளியேற்றியதும், ஒருமைப்பாட்டை வளர்த்ததும் ஆங்கிலமன்றோ?... இந்தியன்றே! நாடு. இனம், மொழி, மரபு, நாகரிகம், பண்பாடு ஆகிய பிரிவுகளில் எல்லாம் ஒன்றற்கொன்று வேறுபாடுடைய பெரிய நிலப்பரப்பாகிய இந்தியா தனக்கென மற்றைய நாடுகளைப் போல (ஒரே மொழியைப் பொதுமொழியாகப் பெறாத நாடுகளும் உள்ளன.)

ஒரு பொதுமொழி வேண்டும் என்பது புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொண்ட நகைப்பிற்கு இடம் தரும் முட்டாள்தனமான செயலாகும்.

வடநாட்டில் பார்ப்பன மடத்தலைவரும் அவர்தம் அடிவருடிகளும் ஆட்சியில் வல்லாண்மையைப் பற்ற, இந்து சமயத்தின் பெயரால் 'மாட்டுப் போராட்டம்' நடத்தும் வெறிச் செயலுக்கும் இந்தித் திணிப்பிற்கும் நோக்கத்தில் எள்ளுக்களவும் வேறுபாடில்லை. இவர்தம் விரகை உணர்ந்து விழிப்புறல் வேண்டும்.

தமிழகம் நீங்கலாக எல்லா மாநிலங்களிலும் இந்தியை மாணவர்களும் கட்டாயமாக ஏற்றுள்ளனர் என்று அன்பர் எழுதியிருக்கிறார். இஃது உண்மை அன்று. தமிழரைவிட வங்காளியர் இந்தி எதிர்ப்பில் முன்னிற்பவர் என்பதை அன்பர் அறிவாராக! தென்பால் கன்னட ஆந்திர மொழிகளில் வடமொழிக்கலப்பு மிக்குள்ளதெனும் மொழி நிலை ஒருபுறம் இருக்க, அம்மாணவர் முன்வந்து இந்தியைக் கட்டாயப் பாடமாக ஏற்றுக் கொள்ளவில்லையே! இங்கும் படிப்பவர்(பார்ப்பனர்) படித்துக் கொண்டுதானே உள்ளனர்! 'தென்மொழி' பிற்போக்கு இனத்தைச் சேர்ந்த இளைஞரை இந்தி பயிலவிடாது தடுத்து அவர்கள் வாழ்க்கை வாய்ப்பைக் குலைப்பதாக அன்பர் கூறுகிறார்.

உண்மையிலேயே அவ்விளைஞர் 'தென்மொழி'யின் போக்குப்படி இந்தி பயலாது வேலை வாய்ப்பை இழந்தவராக இருப்பின், நாம் மகிழவுகூரத் தக்கது. ஏனெனில் அவர்களுக்கே அரசினரும் ஏனையோரும் இந்தி உருவில் இழைக்கும் கொடுமைகள் விளக்கமாகப் புரியும். இந்தி படித்து அடிமையெனப் பிழைக்கும் வாழ்வும் ஒரு வாழ்வா?... அவ்விளைஞர் படையும் திரளட்டும்! இந்திக்கு முடிவு கட்டும் நாள் சேய்மையில் இருக்காதே...!

2 தனித்தமிழ் நாடு:

தன்னைப் பேணிக் கொள்ளும் அறிவும் ஆற்றலும் அற்ற ஒருவன் பிறனொருவனைப் போணும் தகுதியுடையவனுகான். அப்படிப்பட்ட ஒருவனிடத்தில் நூற்றுக் கணக்கானவரை ஒப்படைத்தல் நன்று பயத்தற்கா?... மேலும் அவன் கரவும் கயமையும் நிறைந்த கடையனாக இருப்பின் சொல்லத் தேவையின்று அன்றோ? அப்படிப்பட்ட ஓர் இனத்தின் அடியிலா நம் முடியை வைக்க வேண்டும்...?

தொன்மைக் காலத்தும் பண்பாட்டாலும், நாகரிகத்தாலும் தனிக் கோல் ஓச்சிய தமிழர்– பேரரசன் அசோகன் நிழல்படாது தனியாட்சி நடாத்திய தமிழர், தனித்தமிழ் நாடு பெற்ருல் அவருக்கு ஆளத்தெரி யாதா? அல்லது இன்று அறிவும் ஆற்றலும் சான்ற தமிழர் இந் நிலத்தில் அவிந்துவிட்டனரா?... பச்சைப் பார்ப்பன அடிவருடிப் பக்தவத்சலஞர் போன்றோரை அன்பர் நினைவில் கொண்டு எழுதியிருப் பாராயின் அதற்காக இரங்குகின்றேன். ஏனெனில் அத்தகையோர் எதிர்கால முடிவை அன்பர் பொறுத்திருந்து பார்ப்பாராக!

உலக முதன்மையாலும், மொழியாலும், வரலாற்ருலும், ஒழுக்க முறையாலும் சீரும் சிறப்பும் பெற்ற தமிழர், 'அஞ்சல், நாட்டுக்காப்பு, போக்குவரத்து, அயல்நாட்டு உறவு போன்ற துறைகளில் 'மூடம் பட்டா விடுவர்? தமிழரின் எண்ணிக்கையில் குறைந்துள்ளோரும், தமிழ்நாட்டின் நிலப்பரப்பில் குறைந்த நிலப்பரப்பை உடையோரும் இன்று உலகில் தனியாட்சி நடத்தவில்லையா?... 'உணவுத்துறைகூட மைய அரசின் பொறுப்பில் இருக்கவேண்டிய நிலை இன்று உருவாகி உள்ளது' என்ற அன்பரின் எழுத்துகள் நாணுத் தருகின்றன. தமிழ கம், இயற்கைச் சீற்றத்தால் பொலிவிழந்த இக்காலத்தும்," தமிழ ருடையவை தமிழருக்கே என்ருல் தமிழருக்குப் பிறருடைய உணவு வருவாய் உண்மையிலேயே தேவையின்று என்பதை முக்காலத்தும் உணர்க!

அன்பர் மேலும் பழைய தென்மொழிகளைப் படிக்கவேண்டும் என் றும், 'தென்மொழியின் தெள்ளிய கொள்கைகள்' என்று பொறிக்கப் பட்டுள்ளவற்றை ஆழ்ந்து நோக்க வேண்டும் என்றும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் மக்கள் வாழ்வுக்கு வேண்டுவனவாக அன்பர் குறித்த ஆறும் தள்ளற்குரியன அல்ல. நன்னெறியில் தமிழகத்தை இட்டுச் செல்ல ஒரு தலைவனும் கட்சியும் தோன்றுமா என்று, அன்பர் இறுதி யில் கேட்கும் கேள்விக்குத் தென்மொழி யாசிரியரை விடை இறுக்கு மாறு பணிகிறேன்.

வெல்க தனித்தமிழ் நாடு!

நாஞ்சில், செ. சுந்தரராசன், பொறி இ.

கலைச் சொல்லாக்கம்

மாந்தன் தோன்றும் போதே அறிவு மிக்கவனாய், ஆற்றல் நிரப்பியவனாய், நாகரிகம் முதிர்ந்தவனாய்த் தோன்றவில்லை. உறுப்புக் குறிப்பு மூலம் தன் எண்ணத்தை அயலானுக்கு வெளியிட்ட முதல் மாந்தன், பின்னர் ஓசை மூலம் தன் கருத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளக் கற்றுக் கொண்டான். நாள் செல்லச் செல்ல அவனது அறிவைப் போலவே, மொழித்திறனும் விரிந்து பட்டது. தான் கண்டதையும், கேட்டதையும் விரித்துரைக்கத் தலைப்பட்டான். இயற்கையெனும் இன்பத் தேன்துளியுடன், கற்பனையெனும் கருப்பஞ்சாறு கலந்து இலக்கியமெனும் அமிழ்து படைத்தான். அறிவின் முதிர்ச்சி கண்டவற்றுக்கெல்லாம் காரணம் கேட்கத் தொடங்கியது. இதன் விளைவே "அறிவியல் துறை" (Science). கண்டவற்றுக்குக் காரணம் கற்பித்ததுடன் நின்றுவிடவில்லை அவன். அறிவியலெனும் தோட்டி மூலம், இயற்கையெனும் களிற்றினை அடிமைப்படுத்த முனைந்தான். இதுவே "பொறியியல் துறை"யின் (Engineering) தோற்றம்.

மக்களிடையே கருத்துகள் பெருகி, புதிய துறைகள் வளர, வளர மக்களின் கருத்தைத் தொடர்ந்து செல்லும் தன்மைத்தான மொழியும் விரிவடைகின்றது; துறை தொறும், துறைதொறும் புதுச் சொற்களும் பிறக்கின்றன. இங்ஙனம் அறிவியல், பொறியியல் துறைகளில் பிறக்கும் சொற்களே கலைச் சொற்கள் (Technical Terms) எனப்படும்.

தமிழில் கலைச் சொற்களை ஆக்கும் முயற்சி இன்று நேற்றன்று, ஏறத்தாழ கால்நூற்றாண்டாகவே நடைபெற்று வருகின்றது. தமிழின் நலனில் நாட்டங்கொண்டு அந்நாளில் அயராதுழைத்த "சென்னை மாநிலத் தமிழ்க் கழகம்", கலைச் சொல்லாக்கக் குழு ஒன்று நிறுவி, கலைச்சொல்லாக்க மாநாடு நடாத்தி (20-9-1936) இத்துறையில் போற்றற்குரிய பணி செய்தது.[1] அந்நாளிலேயே மூதறிஞர் இராசாசி கலைச் சொல்லாக்கம் பற்றிக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்[2] அன்றும் இன்றும் செந்தமிழ்ச் செல்வி, தென்மொழி, கலைக்கதிர் ஆகிய தமிழ்த் திங்களேடுகள் அறிவியல் கட்டுரைகள் வெளியிட்டு நவிலற்கரிய நற்பணி செய்து வருகின்றன. கல்லூரியிலும் கன்னித்தமிழிலேயே கல்வி கற்க வேண்டுமென்ற விழிப்புணர்ச்சி இன்றைய இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ளமையின், தண்டமிழில் கலைச்சொல்லாக்க வேண்டியதன் தேவை மிகைப்பட்டுள்ள இந் நிலையில், கலைச் சொல்லாக்கம் பற்றிய சில அடிப்படையான கருத்துகள் இக் கட்டுரையின் கண்ணே விளக்கப்படுகின்றன.

புதிய கருத்துகள் பரவும்போது புதிய சொற்கள் பிறக்கின்றன என்று முன்னரே கண்டோம். அவை பிறத்தல் இருவகையாம். ஒன்று, கருத்துகள் எந்த மொழியாரிடமிருந்து வந்தனவோ அந்த மொழியின் சொற்களையே, நம்மொழியின் பண்புக்கேற்ப திரித்து வழங்குதல். (எ-கா) சைக்கிள், மோட்டார். மற்றொருவகை, கருத்துகள் பரவும் போது அவற்றைக் கற்கும் மக்கள் தம்மொழியிலிருந்தே அதற்கேற்ற சொற்களை ஆக்கிக் கொள்ளுதல். (எ-கா) வானொலி, வானவூர்தி. *

---

* When a speaker or writer wants to express a notion for which his native language has no word, while one is known to him in another language, two ways are open to him. Either he may take the foreign word and use it in the middle of his own language with or without such slight changes in sound, spelling or inflexion as may make it more palatable to his country men, or he may try to coin a new term by means of native speech material, either a compound or a derivative of some existing word.

– Otto Jesperson, "LINGUISTICA" P. 441.

தமிழில் கலைச்சொல்லாக்கும் அறிஞர்களிடையேயும் இது போன்று இருவேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. ஆங்கிலத்தி லுள்ள கலைச் சொற்களை அவ்வாறே பயன்படுத்தலே ஏற்புடையதென ஒருசாராரும், கன்னித் தமிழிலேயே காரணங் கருதிக் கலைச் சொற்க ளாக்கப்படல் வேண்டுமென மற்றொரு சாராரும் கருதுகின்றனர். இவ் விரு கருத்துகளையும் சற்று விரிவாக நோக்குவோம்.

ஆங்கிலக் கலைச் சொற்களை அவ்வாறே பயன்படுத்த வேண்டு மெனக் கருதுவோர், ''தமிழில் புதிதாக ஆக்கும் கலைச்சொற்கள் மாண வர் மனதிற் பதிதல் கடினமெனக்'' கூறிச் செந்தமிழின் செம்மாந்த நடைக்கு முட்டுக்கட்டைபோட முயல்கின்றனர். இவர்களது கூற் றுக்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்னமேயே, தொல்காப்பியர்,

''கடிசொ லில்லை காலத்துப் படினே''

(தொல்–எச்சவியல், 56)

என விடை கூறிப் போந்தார்.

மேலும் அவ்வப்போது தோன்றும் புதுச் சொற்களைத் தழுவிக் கொள்ளவேண்டுமெனும் விதியைக் கூறும் வேறொரு தொல்காப்பிய நூற்பா.

''குரங்கின் ஏற்றினைக் கடுவன் என்றலும்,
மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்,
செவ்வாய்க் கிளியைத் தத்தை என்றலும்,
வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்,
குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்,
இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்,
எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்,
முடிய வந்த அவ்வழக் குண்மையின்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே''

– (தொல் – மரபியல். 69)

இந் நூற்பாவில் வரும் கடுவன் (–கடுமையானது), கோட்டான் (–கோட்டில்–மரக்கிளையில் வசிப்பது), தத்தை (–இலை, காய், கனி யொடு தத்தி வாழ்வது) முதலிய எல்லாச் சொற்களும் காரணம் கருதி வந்தனவாகும்.[3] இவ்வாறு காரணம் கருதி வந்த அவ்வக் காலத்துப் புதிய சொற்களைக் கடிதென ஒதுக்கலாகாதென்பதே தொல்காப்பிய ரின் கருத்து. இஃது இந்நாளில் புதிதாக ஆக்கப்படும் கலைச் சொற் களுக்கும் சாலப் பொருந்தும்.

'யூனிவர்சிடி' (University) என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் ''சர்வகலாசாலை'' எனும் வடமொழிச் சொல்லைப் புழங்கிவந்த நாம், அதனைவிடுத்து ''பல்கலைக் கழகம்'' என்ற தூய தமிழ்ச் சொல்லைக் கூறியபோது, முதலில் நாவுக்குச் சற்றே புளித்ததேனும், இன்று அது செவிக்கினிமை பயக்கவில்லையா? ''பிரசங்கம்'' என்ற சொல்லைச் ''சொற்பொழிவு'' என்று தமிழாக்கியபோது நகைத்த நாவே, இன்று அதனை வழங்க வில்லையா? இதுபோலப் புதிதாய்ப் பிறக்கும் தூய தமிழ்க் கலைச் சொற்களும் காலப்போக்கில் பழக்கமாகிவிடும் என்பது தெளிவு.

மேலும் தாய்மொழியின் வேர்ச் சொற்களினின்று உருவாகும் கலைச் சொற்கள், மாணவர்க்கு எளிதில் விளக்கமளிக்கும் என்பது வெள்ளிடைமலை. காட்டாக, ''டர்பைன்'' (Turbine) என்ற சொல்லைக் கேட்டுத் திகைக்கும் மாணவன், ''சுழலி'' எனக் கூறினால் எளிதிற் புரிந்துகொள்வானே யன்றோ?

இனிக் கலைச்சொற்களை ஆக்கும் வழிவகைகளைச் சற்று விளக்கமாக நோக்குவோம்.

(க) பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், இலைறு நாட்டுப்புற மக்களிடையேயும் நிலவும் கலைச் சொற்களைத் தொகுத்து வழங்கல்:

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் நம் முன்னோர் விட்டுச் சென்ற கருத்துக் கருவூலங்களாகும். ''அறிவியற்றுறை'' எனத் தனியாகப் பகுத்து நூற்கள் எழுதாவிடினும், இலக்கியத்தினூடேயே பல அறிவியற் கருத்துகளை அள்ளி விதைத்துள்ளனர். கழக(சங்க) நூற்களையும், சித்தர் பாடல்களையும் ஆய்ந்து அவற்றில் சிதறிக் கிடக்கும் அறிவியற் கருத்துகளையும், கலைச்சொற்களையும் திரட்டும்பணி தமிழ்ப் புலவர்க்குரியதாம்.

தூய தமிழ்ச் சொற்கள் பல, இன்று நகர்ப் புறத்தே போலி நாகரிகத்தின் பயனாய் வழக்கிழந்து விட்டாலும், நாட்டுப் புற மக்களிடையே நின்று நிலவி வருவதைக் காணலாம், காட்டாக ''ஏண்''என்ற (Centre of gravity) ஓரசைச் சொல் கம்மியரிடையேயும், ''விட்டம்'' அல்லது ''உத்திரம்''(Beam)''எலியோடி''(Bresummer) 'கை'' (Rafter). ''பட்டியல்'' (Reaper) முதலிப கட்டிடவியல் தொடர்புடைய கலைச் சொற்கள் நாட்டுப்புறத்துத் தச்சரிடையேயும்

(Carpenter) வழங்கி வருகின்றன. மறைந்து வரும் தூய தமிழ்ச் சொற்களைத் திரட்டி வெளியிடும் பணியில் "தென்மொழி" எனும் தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ் ஈடுபட்டுள்ளமை போற்றற் குரிய தாகும்.

(உ) புதிதாகத் தூயதமிழில் கலைச்சொற்களை ஆக்குதல்:

"வீட்டிலே வெண்ணெய் வைத்துக் கொண்டு,
வெளியிலே நெய்க் கலைகிறாற் போல்,"

உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் சொல்வளத்தை விடுத்து, அயல் மொழிச் சொற்களைக் கடன் வாங்குவது நமது முயற்சியின்மையையே குறிக்கும். * ஆதலின் சோம்பலை விடுத்துச் செந்தமிழின் செம்மாந்த வருங்காலத்தையெண்ணி தண்டமிழிற் கலைச் சொற்களாக்குவது நம் கடனேயாம்.

புதிய சொற்களின் ஆக்கமுறையை நான்காகப் பகுக்கலாம்.

(அ) காரணம் கருதி வேர்ச் சொற்களினின்று ஆக்குதல்.

(ஆ) மூலமொழியில் அச்சொல்லின் கருப்பொருள் கண்டு அதுபோலத் தமிழிலும் ஆக்குதல்.

(இ) இரு சொற்களை இணைத்துப் புதியதொன்றை ஆக்குதல்.

(ஈ) ஒப்பாய்வு (Analogy) மூலம் ஆக்குதல்.

(அ) காரணங் கருதி வேர்ச் சொற்களினின்று ஆக்குதல்:

தமிழிலுள்ள சொற்கள் யாவுமே, தூய தென்வேர்ச் சொற்களினின்று (Root) பிறந்தனவாகும். அடிப்படையான ஒரு பொருளினைக் குறித்து நிற்கும் வேர்ச் சொல்லொன்றிலிருந்து பலநூறு சொற்கள் புதிதாய்ப் பிறக்கின்றன.

---

* Mental laziness and regard to their own momentary convenience, therefore led them to retain the Latin word and give it only an English Termination.

-Otto Jesperson, "GROWTH and STRUCTURE of THE ENGLISH LANGUAGE" P. 132

[காட்டாக,[4] "முல்" – இளமையைக் (சிறுமையைக்) குறிக்கும் வேர்ச்சொல். இதிலிருந்து.

முல் – முல்லை (சிறிய பூ)
முல் – முன் – முனி (யானைக் கன்று)
முல் – முள் – முளை (இளங் குருத்து)
முல் – முள் – மள் மழவு (குழந்தை)
... ... இன்னும் பல.]

இது போலவே வேர்ச் சொற்களினின்று பல நுட்பமான கலைச் சொற்களை ஆக்க முடியும். காட்டாக, "மின்" ஒளியைக் குறிக்கும் வேர்ச்சொல். புதிதாக மின்சாரத்தின் (Electricity) பயனாய் விளக் கெரிவதைக் கண்ட தமிழன், இஃது ஒளிக்கு மூலமானது எனப் பொருள்பட, "மின்சாரம்" (மின்–சாரம்) * என்ற தமிழ்ச் சொல்லை ஆக்கினான்.

(ஆ) மூலமொழியில் அச்சொல்லின் கருப்பொருள் கண்டு, அது போலவே தமிழிலும் ஆக்குதல்:

எந்தச் சொல்லைத் தமிழாக்க முனைகின்றோமோ, அச்சொல் மூல மொழியில் எவ்வேர்ச் சொல்லினின்று பிறந்ததென்றறிந்து, அதற் கீடான (அதே கருப்பொருளுடைய) தமிழ வேர்ச் சொல்லை யொட்டி புதியதொரு கலைச் சொல்லை ஆக்கிக் கொள்ளலாம்.

காட்டாக "Flow" (பாய்தல்) என்ற வேரினின்று பிறந்தது. "Fluid" எனும் ஆங்கிலச்சொல். ஆதலின், "Fluid" என்பதற்கீடாய் "பாய்" (Flow) என்ற வேரினின்று "பாய்மம்" என்ற சொல்லை ஆக்கிக் கொள்ளலாம். [மாறாக "மின்சாரம்" எனுந் தமிழ்ச் சொல் "மின்" (ஒளி)என்ற வேரினின்றும், அதற்கிணையான "Electricity" எனும் ஆங்கிலச் சொல்,வேறுபட்ட கருப்பொருளுடைய"எலக்ட்ரான்" (Electron – அம்பரைக் குறிக்கும் கிரேக்கச் சொல்) எனும் வேரினின் றும் பிறந்தனவென்பதைக் காண்க]

(இ) இரு சொற்களை இணைத்துப் புதிய தொன்றை ஆக்குதல்.

கரியும் (Carbon), தீயதையும் (Oxygen) இருவேறு தனிமங்கள் (Elements). இவையிரண்டும் வேதிவினைப்பட்டு இணைந்தால், "கரி

---

* சாறு (பழச் சாறு) – சாரம்.

யிரு தீயதை" (Carbon-di-oxide) என்ற புதியதொரு கூட்டுப் பொருள் உருவாகிறது. இதைப் போலவே நமக்குத் தெரிந்த இரு சொற்களை இணைத்துப் புதிய பொருளொன்றைக் குறிக்கும் சொல்லை உருவாக்க முடியும். காட்டாக, புகையைக் கக்கிக் கொண்டு, தண்டவாளம் வழி ஓடியதொரு வண்டி. "புகை", "வண்டி" இரண்டும் ஏற்கனவே தெரிந்த சொற்கள். இதினின்று "புகைவண்டி" என்ற சொல் பிறந்து விட்டது.

(ஈ) ஒப்பாய்வு மூலம் உருவாக்குதல்.

நமக்குத்தெரிந்த பொருளொன்றுடன், முகாமையான வேற்றுமை யாதுமின்றி ஏறத்தாழ அதே பண்புகளுடைய (Having points of resemblance with no crucial difference) புதியதொன்றை ஒப்பிட்டு ஆய்வதே ஒப்பாய்வு. அறிவியல் (Science), பொருளியல் (Economics), மெய்யறிவியல் (Philosoply) ஆகிய துறைகளில் பெரும்பயன் விளைத்துள்ள இக் கருவியைக் கலைச் சொல்லாக்கப் பணியிலும் பயன்படுத்தலாம். காட்டாக, மின்சாரமும், நீரும் பல பொதுப் பண்புகளுடையன. நீரை நாம் தொன்றுதொட்டே நன்கறிவோம். அது தொடர்புடைய பல சொற்களுமிங்குள. ஆதலின், தமிழகத்துக்குப் புதியதான மின்சாரத்தைப் பற்றிய புதுச் சொற்களை உருவாக்குமிடத்து, "நீர்-மின்சார ஒப்பாய்வை"க் கருத்திற் கொள்ளலாம். காட்டாக, நீரைச் சேமித்து வைக்கும் பாத்திரத்தை "நீர்க்கலம்" என்கிறோம். இது போலவே மின்சாரத்தைச் சேமித்து வைக்கும் "பாட்டரி"யை (Battery) "மின்கலம்" எனலாம். இது போலவே "வால்டேச்" (Voltage) என்பதைக் குறிக்கும் "மின்னழுத்தம்" என்ற சொல் "நீரழுத்தம்" (Water Pressure) என்பதை யொட்டிப் பிறந்ததாகும்

(உ) உலகப் பொதுக்கலைச்சொற்கள் சிலவற்றைச் சிறப்புக் கலைச் சொற்களாக ஏற்றுக் கொள்ளுதல்:

எந்தவொரு விதிக்கும் சில தளர்த்தல்களும் இருப்பது போல், தூய தமிழ்க் கலைச் சொற்களையே ஆக்கவேண்டும் என்ற முயற்சியிலீடுபட்டுள்ள நாமும், ஒரு சில இன்றியமையாவிடங்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய சில உலகப் பொதுக் கலைச் சொற்களை (International Technical Terms) தமிழ் மொழியின் பண்புக்கேற்பத் திரித்துச் சிறப்புக் கலைச் சொற்களாக வழங்கலாம்.[5] காட்டாக,

கணிதவியலில்(Mathematics)வழங்கும், "சைன்"(Sine),'கொசைன்' (Cosine) முதலிய கலைச் சொற்களை அவ்வண்ணமே வழங்கல் ஏற்புடைத்தாம்.

இவ்வண்ணம் ஏற்கும் சிறப்புக் கலைச் சொற்கள் ஒவ்வொரு துறையிலும் விரல் விட்டு எண்ணக் கூடியனவாகவே இருத்தல் வேண்டுமென்பதில், கலைச்சொல்லாக்கப் பணியிலீடுபடும் அறிஞர்கள் கண்டிப்புடன் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

"பாறையினின்று பெயர்த்து வரும் கற்களைக் கொண்டு கட்டிடம் கட்ட முனையும் கட்டிடக் கலைஞன், கற்களைத் தான் கட்டும் கட்டிடத்தின் தன்மைக்கேற்பச் சீர்ப்படுத்துதல்" போலப் பிறமொழிச் சொற்களைச் சிறப்புக் கலைச் சொற்களாய் வழங்குமிடத்து, அவைதம்மைத் தமிழ்வடிவில் சீரமைத்துக் கொள்ளல்வேண்டும். மொழி முதலிலும், இறுதியிலும் நிற்றற்குரிய எழுத்து இவையாமெனவும், இன்ன, இன்ன எழுத்துகள் முன்னர் இன்ன, இன்ன எழுத்துகள் மயங்காவெனவும் இலக்கண நூலாசிரியர் வகுத்துக் காட்டியுள்ளனர். அவர் ஆராய்ந்தமைத்த விதிகட்கிசைவாகச் சொற்களை ஆக்கிக்கொளல் முறையாகும்.

காட்டாக, 'ல'கரம் மொழிக்கு முதலில் வரலாகாதாதலின் "Logarithm" என்ற ஆங்கிலச் சொல்லை "லாகரித்ம்"என்றெழுதாது, "இலாகரிதம்" என்றே எழுதவேண்டும்.

"கலைச் சொல்லாக்கம்" பற்றிய அடிப்படையான கருத்துகள் சிலவற்றை மேலே கூறினம். இத்துறையில் மேலும் ஆழ்ந்து ஆராய்ந்து, இதுபற்றித் திட்டமான கொள்கைகளை நிறுவுமாற்றான், தமிழக அரசு அறிவியல் அறிவு மட்டுமன்றி, ஆழ்ந்த தமிழ்ப்பற்றும், அடிப்படையான மொழியியலறிவும்–குறிப்பாகச் சொல்லாக்கத் திறனும்–உடைய பல்வேறு துறை அறிஞர்களைக் கொண்ட "கலைச்சொல்லாக்கக் குழு"வொன்றை அமைக்க வேண்டும். இவர்கள் ஆக்கும் கலைச் சொற்களைக் கல்வி நிறுவனங்களிலும், ஆய்வுத் துறைகளிலும், தொழிற் கூடங்களிலும் பணியாற்றும் அவ்வத்துறை அறிஞர்களின் பார்வைக்கனுப்பி, அவர்களின் திருத்தங்களையும் பெற்றுக் "கலைச் சொல் தொகுப்பொன்று" வெளியிட வேண்டும். அறிவியற் கட்டுரையெழுதுவாரும் தத்தம் விருப்பப்படி ஆளுக்கொரு வகையான கலைச் சொற்

களைப் பயன்படுத்துவதை விட்டு ஆங்கிலத்திலுள்ளது போல யாவரும் ஒரே சீராக (Uniformly) இத்தொகுப்பிலுள்ள கலைச் சொற்களையே பயன்படுத்த முன்வர வேண்டும்.

இவ் வண்ணம் துறைதொறும், துறைதொறும் கலைச் சொற்கள் பெருகிச் சிறப்பான "அறிவியல் நூல்கள்" தமிழில் எழுந்தால் தமிழின் மணம் இத்தரையெங்கும் பரவும், 'செம்மைப் பூவடியில் சிலம் பொலித்திடச் சின்னச் சிற்றிடையில் மேகலை மின்னிட, அழகுக் கழுத்தில் வற்றாத கற்பனை ஊற்றாகிய கம்பன் பாவியமும், செம்மைச் சைவர் சேக்கிழார் பெருநூலும் மணிகள் பதித்திட்ட மார்ப்பதக்கமாய் இலங்கிட, வண்ணமார்பில் தொகையும், பாட்டும் தூயமணி மாலையாகத் துலங்கிட, நெற்றி நாப்பண் சிந்தாமணியெனும் நந்தா விளக்கொளிர்ந்திட, கொவ்வைச் செவ்வாயில் குறள் முத்துகள் உதிர்ந்திட, வண்ணச் சிறுகையில் வரிசையுறு சிற்றிலக்கியம் காழ்மணி வளையலாய் ஆர்த்திட; அரசோச்சிய தமிழன்னை, விளங்கியல் (Physics) வேதியியல் (Chemistry) உயிரியல் (Biology), பயிரியல் (Agricultural Science) பொருளியல் (Economics), பொறியியல் (Engineering) ஆகிய துறைகளையும் வென்று பேரரசியாய் அரியணை ஏறிடுவாள். அறுந்தது தளை, பிறந்தது விடுதலை, நிறைந்தது புதுமலர் எனத் தமிழ்த்தாய் சிறப்பது உறுதி!

மேற்கோள்: (REFERENCE)

1. "கலைச்சொல்லாக்க மாநாடு"—தமிழ்ப்பொழில்—துணர். 12, மலர். 5 (பக். 224).

2. இராசாசி, "கலைச்சொல்லாக்க முயற்சிகள்" —கலைமகள், தொகுதி. 10 (பக், 208)

3. தேவநேயப் பாவாணர், "கடிசொலில்லை காலத்துப் படினே" —செந்தமிழ்ச் செல்வி.

4. தேவநேயப் பாவாணர், "மாணவன் வடசொல்லா, தென் சொல்லா" —செந்தமிழ்ச் செல்வி—சிலம்பு. 26, பரல். 3.

5. நாஞ்சில். செ. சுந்தர ராசன், "தமிழில் பொறியியல் நூல்கள்" —தொழில் நுட்பம் (மலர்—2). O

(24–ஆம் பக்கத் தொடர்ச்சி)

களையும் உடையனவாய் இருக்கும். இதன் உயரம் ஏறத்தாழ 15 லிருந்து 20 விரற்கடை வரை இருக்கும். இறக்கைகளை விரித்தால் 4 அடி இருக்கும்.

6. நிலவு முகக் கூகை:- (Moon-faced Screchers) இவற்றின் முகம் நிலவைப் போன்று வெண்மையாக இருக்கும்.

இவற்றைவிட இன்னும் பலவகை ஆந்தைகள் இருக்கின்றன. பொதுவாக ஆந்தைகளெல்லாம் வீரிட்டு அலறும். ஆந்தைகள் பழுப்பு சிவப்பு நிறங்களிலும் இன்னும் பல வண்ணங்களிலும் இருக்கும்.

ஆந்தைகளால் நமக்கு என்ன நன்மை?:- ஆந்தைகளால் நமக்கு மிக்க நன்மைகள் உண்டாகின்றன என்று நான் கூறினால் பலர் நம்ப மறுப்பார்கள். உண்மையில் ஆந்தைகளால் உழவர்களுக்கு மிகுதியான நன்மையுண்டு. வயல்வெளிகளில் பயிர்களை ஏராளமான அளவில் அழிப்பவை வயலெலிகள், ஒரு வயலெலி ஓராண்டில் சுமார் மூன்றிலிருந்து ஆறு பதின (LITRE) தவசத்தை (தானியம்) உண்கிறது. ஒரு வயலெலி பொதுவாக ஒரு முறை ஐந்திலிருந்து எட்டுக் குட்டிகள் வரை போடுகின்றது. இவ்வாறு உண்டாகும் எலிகளின் எண்ணிக்கையையும், அவை உண்ணும் தவசத்தின் அளவையும் ஐந்தாண்டுகளுக்குக் கணக்கிட்டுப்பார்த்தால் நமக்கு உண்டாகும் பேரிழப்பு தெள்ளென விளங்கும். இவ்வாறு இழப்பை விளைவிக்கும், வயலெலிகளை மிக மகிழ்ச்சியோடு ஆந்தைகள் பெருமளவில் தங்கள் உணவாகக் கொள்கின்றன. ஆகையால் ஆந்தைகள் நமக்குப் பெருமளவில் நன்மை செய்கின்றன. இதனால் ஆந்தைகளைப் "பறவையுலகின் பறக்கும் பூனைகள்" என்றும், "உழவனின் தோழன்" என்றும் கூறலாம்.

மேற்கூறிய விளக்கங்களிலிருந்து ஆந்தையைப்பற்றித்தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் பல இருக்கின்றன என்பதை அறியலாம். இனிமேல் நீங்கள் ஆந்தை வீரிட்டு அலறும் அலறலைக் கேட்க நேரிட்டால் அதனால் நாம் அடையும் நன்மைகளை எண்ணி அதனை வாழ்த்துங்கள். அதன் கூப்பிடுதலை எண்ணிக் குறி (சகுனங்)களை அறிய முற்படாதீர்கள். எவராகினும் அதன் அலறலைக்கேட்டு நடுங்கினால் அவர்களுக்கு ஆந்தையைப்பற்றி விளக்கமாகக் கூறி அவர் மூட நம்பிக்கையைத் தகர்த்தெறியுங்கள். O

ஆர்விடுத்தா லென்ன? இங் கார்போற்றி னுலென்ன?
சீர்வழுவா யாப்பும் செழித்த தனித்தமிழும்
எந்தமிழர்க் குள்ளொளியை ஏற்றும் உயர்கருத்தும்
முந்தியிங் கில்லா முழுச்சிறப்பும் கொண்டு, அடிமைப்
பூட்டறுக்க வல்ல புதுமை ஒளிர் பாட்டே
பாட்டரங்கம் ஏறுகின்ற பாட்டு!

மாந்தர் உறவு!

மு. மகிழரசன்.

புற்றுயரும் மண்முகட்டின் புறத்திலொரு சிற்றில்
புதுக்கியங்குப் பெருமையுடன் புரண்டிருப்பேன்; சுற்றி
உற்றுயரும் நச்சரவின் உடல்நெளியும் வழியில்
உவந்தியங்கி உழன்றிருப்பேன்; ஒருங்கவைதாம் கூடிச்
செற்றுயரும் சீற்றத்தும், செலவொழித்துச் சற்றுச்
செருக்கியவன் உறவாடிச் சிரித்திருப்பேன்; வஞ்சம்
மற்றுயரும் தீநெறியின் மனம்பழகும் நச்சு
மாந்தரிடம் உறவாட மனங்கொள்ளேன் இனியே!

விலங்குடைய வெங்கொடிய முட்கானின் வெளியில்
விருப்புடைய குடிலமைத்து வலம்தருவேன்; நெஞ்சக்
கலங்குடைய அதிர்வொலிக்கும் கடும்பசிய புலியின்
கடுங்குரலை முழவொலியென், களித்திருப்பேன்; அரியின்
குலுங்குடைய பாய்ச்சலினைக், குதித்துவரும் மகவின்
குறும்புடைய விளையாட்டாய்க் குழைந்திருப்பேன்; ஆனால்
மலங்குழைத்த வன்னெறியில் மனம்பழகும் கொடுமை
மாந்தரிடம் உறவாட மனங்கொள்ளேன் இனியே!

வெய்யவனுக் குடல்புழுங்கி வெளிக்கிளம்பி வீழ்ந்து
விரைந்தோடும் கருந்தேளும் செந்தேளும் வாரிக்
கைமிகுத்தே அவற்றசைவைக் கனிவுடனே பார்த்துக்
களித்திருப்பேன்; கொட்டிடினும் கடுநோயைத் தீர்க்கும்
மெய்ம்மைமிகு மருத்துவனின் ஊசியென மெச்சி
மெய்மறந்து சிரித்துமிக மனங்குளிர்வேன்; ஆனால்
மைமிகுத்த கள்ளநெறி மனம்பழகி நோய்செய்
மாந்தரிடம் உறவாட மனங்கொள்ளேன் இனியே!

இருள்நடுவில் இயல்வாழ்வின் இடுகாட்டுப் பேயோ(டு)
இணையில்லா நட்புற்றும் இழைந்திருப்பேன்; மெதுவாய்த்
தெருநடுவில் உருவெடுத்துத் திரிந்துலவும் போது
தெளிதுணையென் றுடனடந்தும் திரிந்திருப்பேன்; அலகை
உருவடிவ மயல்விடுத்தும், உணர்வடிவும் எடுத்தும்
உறவுடைய உரையாடி உவந்திருப்பேன்; ஆனால்
மருளுடைய சிற்றறிவின் மனம்பழகும் கரவு
மாந்தரிடம் உறவாட மனங்கொள்ளேன் இனியே!

கட்டுப்பா டில்லாமல் திரிந்துலவும் சோம்பல்
கழுதையொடும் உறவாடிக் கலந்திருப்பேன்; பண்ணின்
ஒட்டுப்பா டில்லாமல் ஓலமிட்டுக் கத்தும்
ஓசையிலும் உடன்பாடுற் றுவந்திருப்பேன்; எட்டி
முட்டுப்பா டில்லாமல் பின்னுதைக்கும் காலின்
முரட்டுப்பா டினிதென்றும் முனைந்திருப்பேன்; ஆனால்
மட்டுப்பா டிலாத்தீமை மனம்பழகும் முரட்டு
மாந்தரிடம் உறவாட மனங்கொள்ளேன் இனியே!

கட்டிவைத்த ஆக்களொடு கட்டுண்டு கூடிக்
கால்மடக்கிக் கையூன்றிப் படுத்திருப்பேன்; ஆங்கே
ஒட்டிவைத்த கழுநீரின் தொட்டியிலே குனிந்தே
ஒருமனமாய் உறிஞ்சிநீர் குடித்திருப்பேன்; கொம்பின்
முட்டவரும் விரைவறிந்தே மெய்யன்பு காணல்
முன்னின்று முகம்தடவிக் கொடுத்திருப்பேன்; ஆனால்
மட்டறிவும் புல்லுணர்வும் மனம்பழகும் மடமை
மாந்தரிடம் உறவாட மனங்கொள்ளேன் இனியே!

புழுவோடு புழுவாகப் பொழுதெல்லாம் ஈரப்
புழுதியிலும் நெளிந்தலைந்து புதைந்தூர்வேன்; அங்குக்
கழிவான மலமுருட்டும் கரிவண்டைக் காணக்
கசந்தாலும் இனிதுமனம் கலந்திருப்பேன்; ஆனால்
இழிவான பண்பாலும் பழிசெயல்கள் மிக்க
ஏமாற்று முனைப்பாலும் இழிவுடைய இன்பம்
முழுதாளும் புன்மையிலே மனம்பழகும் கீழ்மை
மாந்தரிடம் உறவாட மனங்கொள்ளேன் இனியே!

மரத்துக்கும் உறவாற்றி மகிழ்ந்திருப்பேன்; தூணின்
மாட்சிக்கும் உறவாற்றி மலர்ந்திருப்பேன்; கல்லின்
கருத்துக்கும் பணிவென்று கலந்திருப்பேன்; சுவரின்
கதிக்குற்ற துணையென்று கனிந்திருப்பேன்; உருகா
இரும்புக்கும் உறவென்றே இணைந்திருப்பேன்; ஆனால்
இருளூற்ற கயமைநெறி இருந்திழிந்து மேனி
மரத்துப்போய் உணர்வற்ற மனம்பழகும் வெறுமை
மாந்தரிடம் உறவாட மனங்கொள்ளேன் இனியே!

முள்ளுக்கும் உறவென்று மெத்தெனமேல் புரள்வேன்;
மூளெரியை நீரென்று முழுக்காடிக் குளிர்வேன்;
புல்லுக்கும் உறவென்று பூரிப்பேன்; இருள்சூழ்
புதருள்ளும் உரிமையொடு புகுந்திருப்பேன்; ஆனால்
உள்ளுக்குள் நலிகின்ற உறுதுயர்நோய் கூட்டி
உயிருக்கும் ஒத்தவர்போல் உடன்சிரித்துக் கூடி
மல்லுக்கு வித்திட்டு மனம்பழகும் பொய்மை
மாந்தரிடம் உறவாட மனங்கொள்ளேன் இனியே!

நண்ணுதற்குக் கொடியரிவர் நம்புதற்கும் கொடியர்!
நட்பினுக்குக் கொடியரிவர் நவிலுதற்கும் கொடியர்!
எண்ணுதற்கும் கொடியருற வெய்துதற்கும் கொடியர்!
எந்நொடியும் கொடியரிவர் எவ்வழியும் கொடியர்!
கண்ணுறக்கப் பொழுதும்வன் கருத்துறங்காக் கொடியர்!
கரவுடைய கொடியரிவர் கடுநஞ்சிற் கொடியர்!
மண்ணுறக்கம் பெற்றபின்னும் கொடியர்! இந்தக்கொடிய
மாந்தரிடம் உறவாட மனங்கொள்ளேன் இனியே! O

மிகநல்லவர் !

—இரா. இளவரசு.

ஏழையர் தாமிக நல்லவர் – பெரும்
பேழை வழிபொருள் பெற்றவர் தம்மினும் (ஏழை)

காய்ந்த தலையினர் கருகிய புல்லென,
காட்டெலி வளையுள் வண்டெனும் கண்ணினர்;
தேய்ந்த செருப்பெனப் பிறரால் தேய்ந்தவர் (ஏழை)

கொட்டாங் கச்சியாய்க் குழிந்த கதுப்பினர்;
கொட்டும் வெய்யிலிற் கரிந்த முகத்தினர்;
தட்டான் உருக்கும் தனிப்பொன் மனத்தினர் (ஏழை)

வற்றிய இலுப்பைக் காயவர் வாயிதழ்!
வரிவரி எலும்புக் கூடவர் மார்பகம்!
வற்றிய ஓடையாய் ஒட்டிய வயிறுடை (ஏழை)

காய்ப்புக் காய்த்துச் சொரசொரப் பான கை;
கண்ட துண்டோ கால்கள் மிதியடி ?
மூப்பா? நோவா? முடங்கின ரிலரே! (ஏழை)

கந்தலைப் பாரடா! எத்தனைக் கிழியல்!
காசு படைத்தவன் தந்த பரிசிது;
மந்தை மாடல்ல, மக்கள டாஅவர். (ஏழை)

உழுவார், விதைப்பார், ஓம்புவார், அறுப்பார்
ஒருவன் பயனை உறிஞ்சிக் கொழுப்பான்,
அழுவார் கூழுக் குழல்வார் அந்தோ! (ஏழை)

கழுத்தை வளைத்தெனைக் காணென நிமிர்ந்த
கட்டிடம் கட்டுவார், கழிபொருட் கிடங்கில்
விழுந்து கிடப்பார், வீடின்றி மாடாய் (ஏழை)

கதிரவன் காய்வா? கடும்பனிக் குளிரா?
காடா? மேடா? கல்லா? முள்ளா?
எதையும் பாரா துலகை இயக்கும் (ஏழை)

மாடென வண்டி இழுக்கிறுன் ஒருவன்;
மகிழுந் தேறிப் பறக்கிறுன் ஒருவன்;
ஏனடா இந்நிலே? எழடா தோழா! (ஏழை)O

நெஞ்சில் பாய்ந்திடுவோம் !

–இரா. பவானந்தன். அறி. இ.
திருவிடைமருதூர்.

தாலாட்டுப் பாட்டுக்கும் ஊக்கம் இல்லேயா?
தாயூட்டும் பாலுக்கும் ஆக்கம் இல்லேயா?
வாலாட்டும் இந்திக்கு அஞ்சி விட்டாரே?
வாய்ப்பூட்டுப் போட்டதனுல் வாயிழந்தாரே?

தமிழ்நாட்டில் மூவேந்தும் ஆளவில்லேயா?
தமிழாட்சி பாரெங்கும் ஓங்கவில்லேயா?
தமிழுக்கே நாமெல்லாம் வாழவில்லேயா?
தனியான ஆட்சியிலே மாட்சியில்லேயா?

தாயகத்தில் ஆண்மைக்கோ அச்சம் வந்தது?
தமிழ்க்கடலில் முத்துக்கோ பஞ்சம் வந்தது?
வாயறியா இந்திக்கு வாழ்வளித்தாரே!
வருந்தாமல் நோகாமல் வால்பிடித்தாரே!!

வீறுகொண்டு தோள்களினும் துடிக்க வில்லேயா?
வென்றிடவே உள்ளமெலாம் துள்ள வில்லேயா?
கூறுபடக் கொடுவாளே ஏந்திடுவோமே!
கொல்புலிபோல் அவர்நெஞ்சில் பாய்ந்திடுவோமே!! O

உணர்ச்சி வடிவாம் ஒருவர் !

–அமிர்தலிங்கம், அண்டர்பந்தி.

சீர்சான்ற தமிழ்காக்க வேண்டும் என்றுல்
திறல்மிகுந்த பாவேந்தர் தம்மைப் போல்வார்
ஊர்தோறும் ஒவ்வொருவர் வேண்டும்; ஆனுல்
உணர்ச்சிவடி வாம்ஒருவர் தாமும் இல்லே.
பாவேந்தர் இன்றில்லே; எனினும் அன்னுர்
பாடலெலாம் அவருள்ளத் துணர்வே அன்றே?
பார்புகழும் அவர்தமிழைப் பயின்றே நாளும்
பைந்தமிழைக் காத்திடநல் உறுதி கொள்வோம் O

மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்.

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனுல்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்ருகப் பேணிவர நாம் முனைவோம்; நாற்புறமும்
சென்று மறைந்து வரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக;
செப்பம் மொழிக்குச் சிறப்பு.

தொகுத்தவர். அ பொன்னுச்சாமி, புலிகரம்பலூர்,
வைத்தியநாதபுரம், (அஞ்) திருமுதுகுன்றம் வட்டம்.

அசாடு–குப்பை கூளங்கள். அருக்களித்தல்–உடல் சிலிர்த்தல்
அலவாட்டல்–காயவைத்தல். அரைமுடி–பெண்குழந்தையின் குறியை மறைக்கும் அணி.

ஆக்கைக்குத்தல்–கூரைவேயும்போது வைக்கோல் பிடிப்புக்காகக் கட்டுப்போடல்.

ஆரல்–வீட்டுப்புறத்தில் மறைவுக்காகக் கட்டப்படும் சுவர். (Compond Wall)

ஆழக்கால்–வீட்டு விட்டத்தில் பொருத்தப்படும் கால்.

இளங்கொடி–ஆடு போன்ற கால்நடை குட்டி போட்ட பிறகு வெளிப் படும் குடல்.

உரம்–குழந்தைக்கு ஏற்படும் நோய்.

உழக்குக் கட்டை–ஏரில் மாடு நடக்கும் போது ஓட்டுபவருக்கு அருகில் போகும்படி நுகத்தடியில் கட்டப்படும் கட்டை.

எதிர்ப்பண்ணை–ஏர்க்கழியையும் நுகத்தடியையும் இணைக்கும் கயிறு.

ஏகடியம்–கேலி. **ஓதம்பல்**–நிலம் அதிக ஈரமாயிருத்தல்.

ஒத்தாட்பு–கிடையில் ஓராள் படுக்கப் பயன்படுத்தப்படும் மட்டையா லான கூடு.

கட்கம்–இடுப்பு; எண்ணெய், நீர் போன்றவற்றின் அடியில் தங்கும் பொருள்கள்.

கச்சிதம்–சரி. **கசம்பன்**–செலவிட அஞ்சுபவன்.

கடுங்கால்–வீணே நிலத்தைப் பயிரிடாது வைத்திருத்தல்.

கரண்டுவான்–சுண்ணாம்புக் குவளை.

கம்பத்தான்–பெரிய பணக்காரன். **காசலங்கை**–புளிச்சைக்கீரை.

காடி–சோற்றுநீர் நன்றாகப் புளித்திருத்தல்.

கிசுகிசுத்தல்–உடலில் சிலிர்ப்பை உண்டாக்கல்.

கிட்டி–படல் கட்டும்போது வலிவான கழிகளை இடையில் வைத்துக் கட்டுதல்.

கிலுகிலுப்பை–குழந்தை விளையாட்டுப் பொருள்.

கில்லாடி–பகடி (கேலி) **கீணம்**–பிளவு.

கூடல்வாய்–வீட்டின் வளைவு இணையும் இடம்

கேதாரி–ஊர் சுற்றும் சோம்பேறி

கைச்சாத்து–அத்தாட்சி (BILL)

கொடலை–மாடு தீனி தின்பது இரையாமலிருக்க அமைக்கப்பட்டுள்ள இடம்;மழையில் நனையாமலிருக்க மட்டையால் செய்த கூடு.

கொடாப்பு–காட்டில் காவல் புரிய காப்பாக இருக்கும் கூடு.

கொட்டாம்–தண்ணீரில் மருந்து கரைத்து அதை மாடுகளுக்குச் சிந்தாமல் வாயில் செலுத்தும் கருவி.

கொண்டம்–அணை. கொதவு–ஈடு, அடகு, பணயம்.
கொப்பு–பெண்கள் காதணி.
கொப்பி–மாட்டின் கொம்பில் கட்டும் பித்தளை.
கொரா–ஆட்டில் (வெள்ளாடு) குட்டிப் போடாது உள்ள ஆடு.
கொலுசு–பெண்களின் காலணி.
கொழுந்தன்–கணவனின் தம்பி.
கொழுந்தி–மனைவியின் உடன் பிறந்தாள்.
கொழுவான்–தன் வேலையில் கருத்துடையவன்.
சமுக்கம் (சவுக்கம்)–சதுரம்.
சரளிக்கட்டை–மேழியின் நுனியில் மாட்டும் கட்டை.
சரணை–ஒருவகை விளையாட்டு. சருவம்–செம்பாலான பானை.
சாவடி–ஊர்ப்பொதுவிடம். சாலவம்–நீர்போக்கும் குழாய்.
சால்–நீரிறைக்கும் கருவி.
சாருமணை–சாயும் வண்ணம் செய்யப்பட்டமேடை.
சுங்கான்–புகைபிடிக்கும் கருவி.
சுரணை (சுணை)–கத்தியில் உள்ள கூர்மை.
செதம்பு–நிலம் நன்றாக ஊறுதிருத்தல்.
செத்தை–குப்பை. செப்பலோடல்–இரவு போய்க் காலை வருதல்.
சொக்காய்–சட்டை. சொளுவு–வரகு கப்பி நீக்கும் கருவி.
சோடுப்பு–கலப்பை கட்டும் கயிறுகள்.
சோணி–வலிவற்றவன். தம்பட்டை–காளைகளில் ஆண்மைமிக்கது.
தலைச்சன்-முதல் குழந்தை. தாட்பு–தவசம் அடிக்கும் முன் குவித்து வைத்திருப்பது.
திரட்டி-பூப்படைந்த பெண்ணுக்குத் தீட்டு கழிக்கும் சடங்கு; மஞ்சள் நீராட்டல்.
தீவா-ஆட்டுக்கிடையில் ஒவ்வொருவருக்கும் உரிய பகுதி.
தொரவு-நன்செய் ஓட்டும்போது கலப்பையில் தங்கும் மண்.
நாத்தி-கணவனின் மூத்தாள். நொறுவை–தின்பண்டம்.
பண்ணை–கீரை வகைகளில் ஒன்று; அடிமை;ஆடுமாடுகள் வளர்ப்பிடம்.
புரிகோல்–கயிற்றின் புரி விடப் பயன்படும் கருவி.
பிருவை–செம்மறி ஆட்டில் குட்டிப்போடாத பெண் ஆடு.
பைங்கால்–மேய்ச்சலிடம். பொகிடு-பெண்கள் காதணி.
பொடியன்–சிறிய பையன். பொலி–ஆட்டில் ஆண்தன்மையுள்ளது.
போத்து–குருத்து. மச்சி–உள்வீடு. மடக்காணி–சிறுகத்தி.

மறுக்குதல்–தீட்டுதல். முருகு–ஆண்கள் காதணி.
மோத்தை–வெல்ல உருண்டை.
மோர்ச்செண்டு–கன்றுக்குட்டியின் முகத்தில் கட்டும் கயிறு.
வதாடு–வற்றல். வலிச்சி–வீடுவேயக் கூரையில் கட்டப்படும் கழிகள்.
வாட்டப்புலி–தவசம் தூற்றும் வகைகளில் ஒன்று.
வெங்காறு–நிலம் வெடித்திருத்தல்.
வெண்டயம்–எருது கழுத்தில் கட்டப்படும் உருளையான பொருள்.
வேசாரல்-வெயிலால் களைத்தல்.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தவர்:- விழிஞை. எழிலரசன்,
சிற்றூர் சீரமைப்பாளர், கப்பியாம்புலியூர்.

அட்டம்-பரணை. அலவு-தென்னை ஈர்க்காலான துடைப்பம்.
ஊமுக்கு–நொய்யரிசியில் ஏற்படும் கழிவு நொய்.
ஊமுள்–புதுத்துடைப்பத்தில் உள்ள தூள்கள்.
செதால்–அடுப்பெரிக்கப் பிளந்த மரக் கட்டை.
செதும்பு–உடம்பில் எளிதில் நுழையும் மரக்கட்டைத் துணுக்கு.
சூடு–நெற்கதிர். போட்டுக்கயிறு–சூடு அடிக்கும் கயிறு.
போட்டு ஆள்–சூடு அடிப்பவன். படுவு–பிணையடிக்கும் பரப்பு.
பொதி–சூடு அடிக்கும்போது ஏற்படும் நெற்குவியல்.
முன்வாய்-நெல் தூற்றும்போது பதருக்கும் நெல்லுக்கும் இடைப்பகுதி
கச்சா–மீன்பிடிக்க ஈச்சங் கசங்காலான கூம்பு போன்ற கருவி.
சாரி–மீன்பிடிக்க ஈச்சங் கசங்கால் ஆன படல் போன்ற கருவி.
எத்தாழை–ஏனங்களடுக்கி.
வெகேரி(வெகாரம்)–எதைக் கண்டாலும் பிடுங்கித்தின்னும் நிலை.
தட்டுக்கூடை(வடிதட்டு)–சோற்றுக் கஞ்சி வடிக்கப்பயன்படும் பல துளைகள் உள்ள ஏனம்.
கண்ணுடிச்சுவர்-அடுப்புப்பக்கத்தில் விளக்கு வைப்பதற்காக உள்ள சிறு சுவர்.
கஞ்சிக்குழி - சோறு வடிக்கும்போது கஞ்சி பிடிக்கும் ஏனம் வைக்கும் இடம்
நாய்முள்-உடம்பில் ஏற்படும் "பரு" போன்ற கொப்பளம்.

- நன்றி -

O தி. பி. ௧௯௯௭. கன்னி ௨௪-ஆம் நாள் சேலம், அருவி ஆசிரியர் அவர்கட்குப் பிறந்த ஆண்மகவுக்குத் **தமிழ்வென்றி** எனப் பெயர் சூட்டியதன் நினைவாகத் தென்மொழி அச்சகத்துக்கு அன்பளிப்பாக உருபா பத்து விடுத்துள்ளனர்.

O தி. பி. ௧௯௯௭ நளி ௧௯-ஆம் நாள் பாளையங் கோட்டை திரு.ப.வளனரசு அவர்கட்குப் பிறந்த ஆண்மகவு **அருள் இளங்கோ**வின் பிறப்பு நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு அன்பளிப்பாக உருபா பதினாறு விடுத்துள்ளனர்.

மேற்கண்ட தொகைகள் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப் பெற்றன.

— அமைச்சர்.

'தென்மொழி' தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசு செய்தித்தாள் பதிவுச்சட்டம் 1956,
4-ஆம் வகுப்பு—8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம்:	கடலூர்-1.
2. காலமுறை:	திங்கள் ஒரு முறை.
3. அச்சகத்தார்:	மா. தாமரை. தென்மொழி அச்சகம், கடலூர்-1.
இனம், முகவரி:	தமிழர், கடலூர்-1.
4. வெளியிடுவார்: இனம்: முகவரி:	திருவாட்டி: மா. கமலம். (தாமரை) திருவாட்டி: ப. செகதீசுவரி (உலக முதல்வி) தமிழர். தென்மொழி அச்சகம், கடலூர்-1.
5. ஆசிரியர் பெயர், முகவரி:	பெருஞ்சித்திரன். கடலூர்-1.
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல்முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர், இவர்தம் பெயர்களும் முகவரிகளும்	திருவாட்டி: மா தாமரை. திருவாட்டி: உலக முதல்வி. கடலூர்-1.

தாமரை, உலகமுதல்வியாகிய நாங்கள் இவ்வுறுதிவழி மேலே காணப்பெறும் விளக்கங்கள் யாவும் நாங்களறிந்த வரை முற்றிலும் உண்மையென முடிவாக அறிகின்றோம்.

10-3-67
கடலூர்-1.

— தாமரை, உலக முதல்வி.
ஒப்பம்.

அச்சக அமைப்புக் கடன் திட்டம்

(1-12-66 முதல் 28-2-67 முடிய அலுவலகத்திற்கு வந்ததொகைகள்)

கடன்.

	உருபா.	காசு.
க. நூறு உருபா வகை:		
மலையா அன்பர், திரு. கு. குருசாமி அவர்கள் வழி.		
திரு. பொ அடைக்கலம், சிங்கப்பூர்.	100	
உ. பத்து உருபா வகை:		
திரு. கு. குருசாமி, சிங்கப்பூர்.	20	
	120	

அன்பளிப்பு.

மலையா முகவர் திரு. அழகிரிசாமி அவர்கள் 4, 5, ஆம் முறைகளில்	115	
அவர் வழி: திரு. சாத்தப்பன் ஈப்போ	35	
சேலம்-அருவி. ஆசிரியர்தம் ஆண்மகவுக்குத் தமிழ்வென்றி எனப் பெயர் சூட்டியதன் நினைவாக.	10	
பம்பாய் அன்பர்.	2	
பாளையங்கோட்டை தூயயோவான் கல்லூரி மாணவர்கள் திரு. கா. சு. மாணிக்கம் அவர்கள் வழி.	16	20
13-ஆம் முறையாக: பு. புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றச் செயலாளர் திரு. பு. கா. பாலசுப்பிரமணியம் அவர்கள் வழி:		
மறைமலையடிகள் மன்றம்.	1	
திரு. இளமுருகு.	1	
,, இரா. ஆறுமுகம்.	1	
,, ஆடலரசு	1	
,, சு. பாலசுப்பிரமணியம்.	1	
,, அருணகிரி.	1	
திரு. மங்கலம், இளங்கோவன், நாகமங்கலம்.	1	
அவர் வழி:		
திரு. வை. பாலசுந்தரம்.	1	
,, எம். ஏ. சலாம்.	2	
,, த. குடியரசன்.	1	
நாயனூர்பாளையம், திரு. இரா. துளசியரசன்.	3	30

திரு. ஏ. ஆர். சச்சிதானந்தம், திருச்சி, 8. 1
,, அ. இராயப்பன், வீணங்கேணி. 1

மன்னார்குடி அன்பர் திரு. இளஞ்சித்திரன், அவர்கள் வழி:

திரு. முகமது தாகா, சோழபாண்டி. 1
,, இராம. சௌந்திரராசன், தளிக்கோட்டை. 3
,, கி. வ. துரையரசன், மன்னார்குடி. 3
,, வ. அரசகோவாலன் ,, 3
,, பழ. அழகப்பன் ,, 2
,, ந. நல்லப்பன் ,, 2
,, கோ. சண்முகம் ,,
,, ந. நல்லப்பன் ,, 5
,, செயராமன் ,, 1
,, சையது அலி ,, 2
,, கா. கணபதி ,, 2
,, இராமு அச்சகம் ,, 2
,, சி. பழனியாண்டி ,, 1
,, சீ. வேங்கடேசன் ,, 1
,, வீ. சுப்பிரமணியம், மாதவன் பட்டினம். 3
,, விக்தர், மன்னார்குடி. 3
,, சி. சுப்பிரமணியன், கூப்பாஞ்சிக்கோட்டை. 3
ஆசிரியைகள், சாமியா பெண்கள் உயர்தொடக்கப் பள்ளி, கூத்தாநல்லூர் 5

திரு. அ. சீதாராமன், மன்னார்குடி 3
திருவாட்டி. சுப்பு. இலக்குமி, தலைமை ஆசிரியை.
சாமியா பெண்கள் உயர்தொடக்கப்பள்ளி கூத்தாநல்லூர் 3

திரு. சி. கோ. மலையரசு, பொ. இராவண்ணன்
பாச்சியம் நகர், பெங்ளூர்-21. 2

14-ஆம் முறையாக: பு. புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றச் செயலாளர். திரு. பு. கா. பாலசுப்பிரமணியம் அவர்கள் வழி: மறைமலையடிகள் மன்றம் 1

திரு. இளமுருகு 1
,, இரா. ஆறுமுகம் 1
,, கு. சுப்பையா 1
ஆடலரசு 1
,, சு. பாலசுப்பிரமணியம் 1

திரு. தங்க. சகநாதன், பெங்களூர்-14. அவர்வழி:	5
திரு. பெ. துரைசாமி	2
,, ந. குருநாதன்	2
,, ந. சுப்பிரமணியன்	2
,, ம. ஆல்பிரட்டு	2
,, பொன். நடராசன்	2
,, அக்கேசுவரராவு	2
,, வெ. வேணுகோபால்	2
,, கண்ணன்	1
திரு. என். முனிசாமி. தூரவாணிநகர், பெங்களூர்-16.	5
திரு. தொல்காப்பியர் மன்றம், உரந்தை	4
,, பொய்யாமொழி (2-ஆம்முறை)	100
,, 3-ஆம் முறை	100
,, இரா. துளசியரசன், நாயனூர்பாளையம்	2
,, ச. சின்னத்துரை, நெய்வேலி-1.	1
,, 15-ஆம் முறையாக; மறைமலையடிகள் மன்றச் செயலாளர், திரு. பு. கா. பாலசுப்பிரமணியம் அவர்கள்வழி:	
மறைமலையடிகள் மன்றம்.	1
திரு. இளமுருகு	1
,, ஆடலரசு	1
,, இரா. ஆறுமுகம்	1
,, கு. சுப்பையா	1
,, சு. பாலசுப்பிரமணியம்	1
,, செ. அசுமல்லா, பரிவில்லிக்கோட்டை	1
,, இரா. நாராயணசாமி, சல்லிப்பட்டி	4
,, அவர்வழி: திரு. நா. பழனிசாமி	3
,, இரா. பொன்னுசாமி	3
,, ம. கோபாலகிருட்டிணன், திருவல்லிக்கேணி	2
,, பொய்யாமொழி 3-ஆம் முறை.	200

கடன் மொத்தம்:	120	00
அன்பளிப்பு மொத்தம்:	703	50
	823	50
முன் மொத்தம்:	7913	64
தொகுமொத்தம்:	8737	14